# பள்ளிக் கல்வித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2025-2026

## மானியக் கோரிக்கை எண். 43

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
**பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்**

©
தமிழ்நாடு அரசு
2025

# பள்ளிக் கல்வித் துறை
## கொள்கை விளக்கக் குறிப்பு 2025-26

### பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | சாதனைகள் | 3 |
| 3 | தொடக்கக்கல்வி, பள்ளிக்கல்வி மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி | 43 |
| 4 | தனியார் பள்ளிகள் இயக்ககம் | 80 |
| 5 | மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் | 85 |
| 6 | அரசுத் தேர்வுகள் இயக்ககம் | 103 |
| 7 | பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி | 116 |
| 8 | ஆசிரியர் தேர்வு வாரியம் | 121 |
| 9 | பொது நூலக இயக்ககம் | 127 |
| 10 | தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் | 138 |
| 11 | நிதி ஒதுக்கீடு | 148 |

# 1. முன்னுரை

எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு. *(திருக்குறள் – 424)*

நாம் சொல்ல வேண்டியவைகளை எளிய முறையில் கேட்போரின் இதயத்தில் பதியுமாறு சொல்லிப் பிறர் சொல்லும் நுட்பமான கருத்துகளையும் ஆராய்ந்து தெளிவதே அறிவுடைமையாகும்.

**–முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் உரை**

மேற்காணும் வள்ளுவர் வாய்மொழிக்கு ஏற்ப, தனி மனித வாழ்க்கையை மேம்படுத்தவும், அறிவுத்திறனுள்ள சமுதாயத்தினை உருவாக்கவும், அடிப்படையாக அமைவது கல்வியே ஆகும். அனைத்துத் தரப்பு மக்களின் சமச்சீரான வாழ்க்கை மேம்பாட்டிற்கு அடிப்படை, கல்வியில் செய்யப்படும் முதலீடு என்பதனை நன்குணர்ந்துள்ள தமிழ்நாடு அரசு 2025–26ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் பள்ளிக் கல்வித் துறைக்கு மானியமாக ரூ.46,767 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

பள்ளிக் கல்வித் துறையின் கீழ் பள்ளிக்கல்வி இயக்ககம், தொடக்கக்கல்வி இயக்ககம், தனியார் பள்ளிகள் இயக்ககம் ஆகியன பள்ளிக்கல்வியை நடைமுறைப்படுத்தி வருகின்றன. பள்ளிக்கல்விசார் திட்டங்களுக்கு உறுதுணையாக தமிழ்நாடு பாடநூல்

மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், அரசுத் தேர்வுகள் இயக்ககம், ஆசிரியர் தேர்வு வாரியம், பள்ளி சாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககம் ஆகியன செயல்பட்டு வருகின்றன. மேலும், கல்வியில் சிறந்த தமிழ்நாட்டு மாணவர்களின் அறிவாற்றல் மேம்படவும், சிந்தனை செழுமையுறவும் பொது நூலக இயக்ககம் முனைப்புடன் செயலாற்றி வருகிறது.

தமிழர்தம் வரலாற்றுத் தொன்மை, பண்பாட்டு விழுமியங்கள், வாழ்வியல் மதிப்புகளை நன்குணர்ந்து எதிர்கால சமுதாயம் ஏற்றமுறும் வகையில் இன்றைய மாணவர் தலைமுறை அறிவாற்றலைப் பெறவும், வளர்ந்துவரும் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஈடுகொடுப்பதற்கான கற்றல் அனுபவங்களைப் பெற்றிடும் வகையிலும் தரமான கல்வி பெறுவதை உறுதிப்படுத்துவதில் தமிழ்நாடு அரசு உறுதியாக உள்ளது. சமூக, பொருளாதார, பாலின வேறுபாடுகளின்றி சமத்துவமான கல்வியைப் பெறும் சமுதாயமே உலகில் உன்னதம் எய்த முடியும் என்பதை நன்குணர்ந்த தமிழ்நாடு அரசு அதனை அடையும் நோக்கில் பல்வேறு திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறது.

## 2. சாதனைகள்

### *தொடக்கக் கல்வி மற்றும் பள்ளிக் கல்வி*

- 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் அரசு தொடக்கப் பள்ளி மாணவர்கள் பசியின்றி பள்ளிப் படிப்பை மகிழ்ச்சியாகத் தொடர **முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்** 15.09.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் இத்திட்டம் படிப்படியாக விரிவாக்கம் செய்யப்பட்டு தற்போது அரசு நிதி உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 34,987 அரசு / அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் 17.53 இலட்சம் மாணவர்கள் பயன்பெறுகிறார்கள்.
- முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினால், பள்ளிகளுக்கு குழந்தைகள் குறித்த நேரத்தில் வருவது அதிகரித்துள்ளது. குழந்தைகளிடம் கற்றல் ஆர்வம், வகுப்பறைக் கவனிப்பு, நினைவாற்றல், விளையாட்டில் ஈடுபாடு முதலியவற்றில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என மாநில திட்டக்குழுவின்

ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கனடா, இங்கிலாந்து போன்ற நாடுகளும், இந்தியாவில் தெலுங்கானா மாநிலமும் காலை உணவுத் திட்டத்தை தமிழ்நாட்டைப் பின்பற்றி நடைமுறைப்படுத்த உள்ளன.

- **பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம்** மூலம் தொடக்கக் கல்வி மற்றும் பள்ளிக் கல்வி இயக்ககங்களின் கீழ் இதுவரை ரூ.3527.50 கோடி மதிப்பீட்டில் 8370 வகுப்பறைகள், 52 ஆய்வகங்கள், 184 யூனிட் கழிப்பறைகள், 752 மீட்டர் சுற்றுச்சுவர்கள், 5 மாணவர் விடுதிகள், 5 மாணவியர் விடுதிகள் ஆகியவை கட்டப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டுள்ளன. மேலும் 4412 வகுப்பறைகள், 105 ஆய்வகங்கள், 323 கழிப்பறைகள், 2290 மீட்டர் சுற்றுச்சுவர் ஆகியவை கட்டப்பட்டு வருகின்றன.
- அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் **கணினி அறிவியல்** பாடத்தை விருப்பப் பாடமாகப் பயிலும் மாணவர்களிடம் **தனிக்கட்டணமாக** ரூ.200 வசூலிக்கப்படுவது **ரத்து** செய்யப்பட்டுள்ளது. 2022–2023 முதல்

2024–2025 வரையிலான தனிக்கட்டணம் ரூ. 21 கோடியை அரசே ஏற்றுக்கொண்டது. இதன் மூலம் ஆண்டுதோறும் 3.5 இலட்சம் மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

- 11ஆம் வகுப்பு மாணவர்கள் கோடை விடுமுறையைப் பயனுள்ள வகையில் கழிக்கவும் அவர்களின் தனித்திறன்கள் மற்றும் சமூகக் கற்றலை மேம்படுத்தும் வகையிலும் மலைப்பகுதிகளில் ஆண்டிற்கு ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் **கோடைக் கொண்டாட்டம்** என்னும் சிறப்புப் பயிற்சி முகாம் நடத்தப்பட்டு வருகிறது. இதில் தமிழர் பண்பாடு, தலைமைப் பண்பு மற்றும் எதிர்கால இலக்குகள் குறித்துப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. 2022–23 முதல் 2024–25 வரை 3,135 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.
- அரசுப்பள்ளி **ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு உயர்கல்விக்கான உதவித்தொகை** ரூ.5000 என இருந்தது 2023–24 முதல் ரூ.50,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கடந்த நான்காண்டுகளில் 244 ஆசிரியர்கள் பயனடைந்துள்ளனர்.
- 2023–24 முதல் தொடக்கக்கல்வியில் ஒன்று, பள்ளிக்கல்வியில் ஒன்று என மாவட்டத்திற்கு

இரண்டு பள்ளிகள் வீதம் 76 பள்ளிகள் சிறந்த பள்ளிகளாகத் தெரிவு செய்யப்பட்டு ரூ.7.28 இலட்சம் மதிப்பீட்டில் பாராட்டுச்சான்றிதழுடன் **பேராசிரியர் அன்பழகன் விருது** வழங்கப்படுகிறது.

- 2023–24 முதல் அரசு நலத்திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தும் 50 தொடக்க, நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் 50 உயர், மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு **அறிஞர் அண்ணா தலைமைத்துவ விருதும்** பள்ளி வளர்ச்சிக்கு ரூ. 10 இலட்சம் வீதம் 100 பள்ளிகளுக்கு ரூ. 10 கோடியும் வழங்கிச் சிறப்பிக்கப்படுகிறது.
- **கனவு ஆசிரியர் விருது** திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 380 ஆசிரியர்களில் சிறப்புத் தரநிலை பெற்ற **55** ஆசிரியர்கள் 2024–25ஆம் கல்வியாண்டில் சர்வதேச அளவில் பிரான்சு நாட்டிற்கும், இதர 325 ஆசிரியர்கள் இந்திய அளவிலும் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டனர்.
- மன்றச் செயல்பாடுகள், நூல் வாசிப்பு, கலைத்திருவிழா, சிறார் திரைப்படம், விளையாட்டு மற்றும் அறிவியல் ஆகியவற்றில் சிறந்து விளங்கும் **மாணவர்கள்** உலக அளவில்

புகழ்பெற்ற இடங்களுக்கு **வெளிநாட்டுக் கல்விச்சுற்றுலா** அழைத்துச் செல்ல ஆண்டுதோறும் ரூ.3 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 323 மாணவ மாணவியர் ஐக்கிய அரபு அமீரகம், மலேசியா, ஜப்பான், தென்கொரியா. சிங்கப்பூர் மற்றும் ஹாங்காங் ஆகிய நாடுகளுக்குச் சென்று வந்துள்ளனர்.

- 2023-24ஆம் கல்வியாண்டு முதல் **தமிழ்நாடு முதலமைச்சர் திறனறித் தேர்வின்** மூலம் அரசுப் பள்ளிகளில் 10ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களின் திறனைக் கண்டறிந்து ஊக்குவிப்பதற்கு ஆண்டுதோறும் 1000 மாணவர்களுக்கு பத்தாயிரம் (10 மாதங்களுக்கு மாதத்திற்கு ரூபாய் ஆயிரம் வீதம்) 2 ஆண்டுகளுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது.
- 2023-24ஆம் கல்வியாண்டு முதல் **தமிழ் மொழி இலக்கியத் திறனறித் தேர்வு** தமிழ் மொழி மற்றும் இலக்கியத் திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆண்டுதோறும் 11ஆம் வகுப்பு பயிலும் 1,500 மாணவர்களுக்கு மாதம் ரூ.1,500 வீதம் இரண்டாண்டுகளுக்கு

உதவித் தொகை வழங்கப்படுகிறது. இம்மாணவர்கள் பங்கேற்கும் விதமாக திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவுற்றதைக் கொண்டாடும் வகையில் கன்னியாகுமரியில் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் திருக்குறள் மாணவர் மாநாடு நடத்தப்படவுள்ளது.

- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 2021-22 முதல் 2024-25 வரை 475 உதவியாளர்கள், 885 இளநிலை உதவியாளர்கள், 29 தட்டச்சர்கள், 17 சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் ஆகிய பணியிடங்களுக்கு **1406 பேருக்கு நியமன ஆணைகள்** வழங்கப்பட்டுள்ளன.
- **3% விளையாட்டு ஒதுக்கீட்டின்கீழ்** 9 இளநிலை உதவியாளர்கள் மற்றும் 11 உதவியாளர்களுக்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டன.
- அரசுப் பள்ளிகள் மற்றும் அலுவலகங்களில் பணிபுரிந்து பணிக்காலத்தில் உயிரிழந்த ஆசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர் குடும்பத்தின் வறுமை நிலையினைப் போக்குவதற்கு ஏதுவாக அவர்களது வாரிசுதாரர்களுக்கு, தகுதி மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் 1972ஆம்

ஆண்டு முதல் **கருணை அடிப்படையில் பணி வாய்ப்பு** வழங்கப்படும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 2021 முதல் 2024 வரை 650 நபர்களுக்கு இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

- மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனை மேம்படுத்தி விழிப்புணர்வை உண்டாக்கும் பொருட்டு தமிழ்நாடு மாநில பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலம் **பெற்றோர்களைக் கொண்டாடுவோம்** என்ற நிகழ்ச்சி மதுரை, திருச்சி, தருமபுரி, கோவை, காஞ்சிபுரம், திருநெல்வேலி, கடலூர் ஆகிய 7 மண்டலங்களில் நடத்தப்பட்டுள்ளது. இவற்றில் 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். ஒவ்வொரு மாநாட்டிலும் அரசுப் பள்ளிகளுக்குப் பள்ளிச்சீர் வழங்கிய பெற்றோர்கள் சிறப்பு செய்யப்பட்டனர்.
- 2021-22ஆம் ஆண்டு முதல், 11 மற்றும் 12ஆம் வகுப்புகளுக்கான **மறுசீரமைக்கப்பட்ட தொழிற்கல்விப் பாடத்திட்டம்** மற்றும் பாடப்புத்தகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன,

இதன் மூலம் 60,000 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

- அரசு உதவிபெறும் தொடக்க / நடுநிலை / உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் தமிழ்நாடு தனியார் பள்ளிகள் ஒழுங்குபடுத்துதல் சட்டம் மற்றும் தொடர்புடைய விதிகளின்கீழ் ஆசிரியர் பணியிடங்களுக்கு மேற்கொள்ளப்படும் நேரடி நியமனங்களுக்கான **உச்ச வயது வரம்பினை** பொதுப் பிரிவினருக்கு 45 ஆக இருந்ததை 53 எனவும், இதரப்பிரிவினருக்கு 50 ஆக இருந்ததை 58 எனவும் நிர்ணயித்து அரசாணை (நிலை) எண்.44, பள்ளிக் கல்வி (வ.செ.1) துறை, நாள். 16.02.2024ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- அரசு உதவிபெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்ட பட்டதாரி ஆசிரியர் நியமனத்திற்கான ஒப்புதல்கள் மற்றும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ஆசிரியர் நியமனத்திற்கான ஒப்புதல்களை விரைவாக வழங்க அரசு கடித எண்.4132/தொ.க.2(1)/24, நாள் 10.05.2024 மற்றும் அரசு கடித எண்409/ப.க.6(2)/2024-1, நாள் 10.05.2024 இல் உரிய **வழிகாட்டு**

**நெறிமுறைகள்** வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

- முன்னாள் முதலமைச்சர், **முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் பாரத சாரணர் சாரணிய இயக்க 75வது ஆண்டு வைரவிழா ஜம்போரி** திருச்சி மாவட்டம் மணப்பாறையில் நடத்தப்பட்டது. தமிழ்நாடு, பிற மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து சுமார் 20,000 சாரண சாரணியர்கள் பங்கேற்றனர். இதில் 7 சாதனைகள் படைக்கப்பட்டன. இந்நிகழ்வின் முத்தாய்ப்பாக மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களுக்குச் சாரண சாரணிய இயக்கத்தின் உயரிய விருதான வெள்ளி யானை விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை மாண்புமிகு இந்திய குடியரசுத்தலைவர் அவர்கள் வழங்க உள்ளார்.

### ***ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி***

- கொரானா பெருந்தொற்று காரணமாக ஏற்பட்ட மாணவர்களின் கற்றல் பின்னடைவைச் சரிசெய்யும் நோக்கில் **இல்லம் தேடிக் கல்வி** என்னும் திட்டத்தை **1–8 வகுப்புகளுக்கு**

27.10.2021 அன்று தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தியது. 1.65 இலட்சம் தன்னார்வலர்களால் பள்ளி நேரத்திற்குப் பின் மாணவர்களுக்குக் கல்விப் பயிற்சி அளிக்கப்பட்டது.

| கல்வியாண்டு | நிதி ஒதுக்கீடு கோடியில் | மையங்கள் இலட்சத்தில் | பயனாளர்கள் இலட்சத்தில் |
|---|---|---|---|
| 2021-22 | 164.17 | 1.81 | 30 |
| 2022-23 | 226.27 | 2 | 34 |
| 2023-24 | 200 | 1.65 | 24 |
| 2024-25 | 69.91 | 0.5 | 7.97 |
| மொத்தம் | 660.35 | | 95.97 |

இத்திட்டம் கொரானா பெருந்தொற்றினால் மாணவர்களிடம் ஏற்பட்ட கற்றல் இழப்பீட்டை 25% அளவிற்கு மீட்டெடுத்துள்ளது என **கலிஃபோர்னியா சாண்டியாகோ பல்கலைக்கழகத்தால்** நடத்தப்பட்ட ஆய்வில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

- மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் முதற்கட்டமாக 11 மாவட்டங்களில் 914 அரசுப் பள்ளிகளில் 4 முதல்

9ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் **வாசிப்பு இயக்கம்** 21.07.2023 அன்று தொடங்கப்பட்டு பின்பு அனைத்து மாவட்டங்களுக்கும் 1 முதல் 12 வகுப்புகளுக்கு விரிவுபடுத்தப்பட்டது. முதற்கட்டமாக 53 புத்தகங்கள் 90.45 இலட்சம் பிரிதிகள் அச்சடிக்கப்பட்டு, அனைத்து அரசுப் பள்ளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாக மேலும் 70 புத்தகங்களுடன் விரிவுபடுத்தப்பட்டது. இதில் 8 கதைகள், அரசுப் பள்ளி மாணவர்களாலும், 20 கதைகள் ஆசிரியர்களாலும் எழுதப்பட்டுள்ளன. இவற்றில் 4 – 9 வகுப்பு மாணவர்களுக்கு மட்டும் அவர்களது அடைவுத் திறன் மதிப்பீடு செய்யப்படுகிறது. தற்போது 123 தலைப்புகளில் புத்தகங்கள் மற்றும் ஒரு வாசிப்பு இயக்கக் கையேடு அச்சிடப்பட்டு 44.50 இலட்சம் மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் அனைத்து அரசுப் பள்ளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

- 2025க்குள் 1 முதல் 3 ஆம் வகுப்பு வரை பயிலும் 8 வயது நிரம்பிய அனைத்துக் குழந்தைகளும் புரிந்து படிக்கவும், எழுதவும் மற்றும் அடிப்படைக் கணக்குகளைச் செய்யவும் திறன்களைப்

பெற்றிருக்க வேண்டும் என்ற நோக்கில் **எண்ணும் எழுத்தும்** திட்டம் 2022-23ஆம் கல்வியாண்டில் ரூ. 152 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 1.13 இலட்சம் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் சிறப்புப் பயிற்சி பெற்றனர். 2023-24 ஆம் கல்வியாண்டில் ரூ.110 கோடி ஒதுக்கீட்டில் இத்திட்டம் 4 மற்றும் 5 வகுப்புகளுக்கு நீட்டிக்கப்பட்டது. மேலும், அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1-5 வகுப்புகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இதனால் 37,767 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 25.08 இலட்சம் மாணவர்கள் ரூ.152.41 கோடி நிதி ஒதுக்கீட்டில் ஆண்டுதோறும் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்திற்காக இதுவரை ரூ.414.41 கோடி நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது.

- 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் அறிவுசார் குறைபாடுள்ள 36,481 மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு **எளிமைப்படுத்தப்பட்ட எண்ணும் எழுத்தும் பயிற்சி ஏடுகள்** மூன்று பருவங்களுக்கும் தனித்தனியே வழங்கப்பட்டுள்ளன. மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தல் சார்ந்து 40,732 ஆசிரியர்களுக்குக் கையேடுகள் வழங்கப்பட்டுள்ளன.

- **உள்ளடக்கிய கல்வி:** அரசுப் பள்ளிகளில் மாற்றுத்திறனாளி மாணவர்களைக் கண்டறிந்து, அவர்களுக்குத் தேவையான சிறப்புக் கல்வி மற்றும் பிற உதவிகள் வழங்கப்படுவதை உறுதி செய்ய **நலம் நாடி** செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மாணவர்களின் பிறவியிலேயே ஏற்பட்ட குறைபாடுகள், அவர்களது வளர்ச்சியில் ஏற்பட்ட தாமதங்கள் போன்ற 21 வகையான குறைபாடுகளை இச்செயலியின் மூலம் கண்டறிய இயலும். பள்ளிப் பார்வை, ஆயத்தப் பயிற்சி மையம் மற்றும் வீட்டுவழி சிறப்புக் கல்வி மற்றும் பயிற்சிகளைப் பதிவு செய்யும் விதமாக சிறப்புப் பயிற்றுநர்கள் மற்றும் இயன்முறை மருத்துவர்கள் பயன்படுத்தும் வகையில் இச்செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இச்செயலி மூலம் இக்கல்வியாண்டில் 96,082 மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகள் கண்டறியப்பட்டுள்ளனர். இவர்களில் தீவிரமான குறைபாடுகள் கொண்ட 17,676 குழந்தைகளுக்கு அவர்களின் தனிப்பட்ட தேவைகளின் அடிப்படையில் அவர்களது வீடுகளுக்கே சென்று சிறப்புப் பயிற்றுநர்கள் மற்றும் இயன்முறை மருத்துவர்கள் மூலம் சிறப்புக் கல்வி மற்றும்

பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவது இச்செயலி வாயிலாக உறுதிசெய்யப்படுகிறது.

- 2024–25ஆம் ஆண்டில் உள்ளடக்கிய கல்விச் செயல்பாடுகளுக்கு ரூ.93.35 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக நிலையான வளர்ச்சி இலக்கு (SDG) 4.5.1 ன்படி 2015–16 கல்வி ஆண்டில் **76.64 ஆக இருந்த மாற்றுத்திறனாளிக் குழந்தைகளின் (5–19 வயது) சேர்க்கை விகிதம் 2023–24இல் 85.19 ஆக அதிகரித்துள்ளது** குறிப்பிடத்தக்கது.
- 2024–25ஆம் கல்வியாண்டில், அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளைச் சேர்ந்த 76,56,074 மாணவர்களின் **ஆதார் பதிவுகள் மற்றும் புதுப்பிப்புப் பணிகள்** மேற்கொள்ளப்பட்டன. மேலும் 36,91,318 மாணவர்களுக்கான ஆதார் பதிவு புதுப்பிக்கப்பட்டு வருகிறது. இது இத்திட்டத்தின் முன்னேற்றத்தில் ஒரு மைல் கல் ஆகும். ஏனெனில் இது ஒட்டுமொத்த **1,12,81,426** மாணவர்களில் 70% ஆகும். மாணவர்களின் ஆதார் பதிவை அதிக எண்ணிக்கையிலும் அதே நேரத்தில் மிகவும் துல்லியமாகவும் மேற்கொண்டதில் முதலிடம் பெற்றதைப் பாராட்டி ஒன்றிய அரசின் இந்திய தனித்துவ அடையாள

ஆணையம் (UIDAI) 08.04.2025 அன்று தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறைக்கு **பாராட்டுச் சான்றிதழ்** வழங்கி கௌரவித்துள்ளது.

- மாணவர்களின் கற்றல் சூழலை மேம்படுத்தி, அவர்கள் கற்றலில் சிறந்து விளங்க பள்ளிகளில் தேவையான உள்கட்டமைப்பு, இணை பாடத்திட்டத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் 28 மாவட்டங்களில், 28 பள்ளிகள் **தகைசால் பள்ளிகளாக** ரூ.160.82 கோடியில் மேம்படுத்தப்பட்டுள்ளன.
- தொழில்நுட்ப உலகில் தமிழ்நாட்டு மாணவர்கள் உலக அளவில் போட்டியிட ஏதுவாக டிஜிட்டல் முறையிலான கல்வியைப் பெறும் நோக்கில் அரசு நடுநிலை, உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 8,209 **உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள்** ரூ.519.73 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், அரசுப் பள்ளிகளில் 1–5 வகுப்பு பயிலும் மாணவர்கள் பயன் பெறும் வகையில் ரூ.455.32 கோடி மதிப்பீட்டில் 22,931 **திறன்மிகு வகுப்பறைகள்** அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 44.50 இலட்சம் மாணவர்கள் பயன்பெறுவர். ஒவ்வொரு மாணவரும் மடிக்கணினியின் அவசியம்

இல்லாமலேயே எளிதில் கல்வி கற்கவும், மதிப்பீட்டுப் பயிற்சிகளை மேற்கொள்ளவும் பள்ளிகள் தொழில்நுட்ப அளவில் முழுமையாக மேம்படுத்தப்பட்டுள்ளன.

- அரசு உதவி பெறும் சிறுபான்மைப் பள்ளிகள் உட்பட 654 அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் **உயர்தொழில்நுட்ப ஆய்வகங்களை** நிறுவுவதற்கு ரூ.41.86 கோடி நிதி ஒதுக்கப்பட்டு அரசாணை எண்.184, பக(அகஇ)துறை, நாள். 30.07.2024 வெளியிடப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு பாடநூல் கழக நிதியில் அரசு உதவி பெறும் சிறுபான்மைப் பள்ளிகள் உட்பட அரசு உதவி பெறும் தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு 1750 **திறன்மிகு வகுப்பறைகள்** (ஸ்மார்ட் போர்டுகள்) வழங்குவதற்காக ரூ.33.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசாணை எண். 182, 183, பக(அகஇ)துறை, நாள் 30.07.2024.
- **ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி** வாயிலாக அரசுத் தொடக்கப்பள்ளி முதல் மேல்நிலைப் பள்ளி வரை **உட்கட்டமைப்பு வசதி**களை மேம்படுத்த 2021–22 முதல் 2023–24 வரை ரூ.435.96 கோடி மதிப்பீட்டில் 12,210 பணிகள் நடைபெற்றுள்ளன.

92% பள்ளிகளில் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகள் (சாய்வுதளங்கள் மற்றும் கைப்பிடிகள்) ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- அரசுப்பள்ளி மாணவர்களிடையே அறிவியல் மனப்பான்மையை வளர்க்கவும், கணிதப் பாடத்தில் ஆர்வத்தைத் தூண்டவும் **வானவில் மன்றம்** எனப்படும் நடமாடும் அறிவியல் ஆய்வகத் திட்டம் 28.11.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. தமிழ்நாட்டில் உள்ள 13,236 அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 – 8 வகுப்பு மாணவர்கள் பயன்பெறும் வகையில் 710 கருத்தாளர்கள் பள்ளிகளுக்கு நேரில் சென்று அறிவியல் சோதனைகள் மற்றும் கணிதக் கருத்துகளை விளக்கங்களுடன் செய்து காண்பிக்கின்றனர். இதற்கென 2022–23ஆம் கல்வியாண்டில் ரூ.9 கோடியும் 2023–24ஆம் கல்வியாண்டில் ரூ.10 கோடியும் 2024–25ஆம் கல்வியாண்டில் ரூ.11.69 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை, ரூ.30.69 கோடி நிதி ஒதுக்கீட்டில் 33.50 இலட்சம் மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

- பிற மாநிலத் தொழிலாளர்களின் குழந்தைகள், தங்களின் தாய்மொழியுடன் தமிழில் தங்கு தடையின்றிப் பேசவும், எழுதவும் **தமிழ்மொழி கற்போம்** என்ற திட்டம் 2023 முதல் 1-8 வகுப்புகளுக்கு செயல்படுத்தபட்டு வருகிறது. 2023-24ஆம் கல்வியாண்டில் 15 மாவட்டங்களில் 1261 மாணவர்களும், 2024-25ஆம் ஆண்டில் 1545 மாணவர்களும் என மொத்தம் 2806 புலம்பெயர்ந்த குழந்தைகள் தமிழ்மொழியை ஒரு பாடமாகவும் பிற பாடங்கள் அனைத்தையும் தங்கள் தாய்மொழியிலும் கற்கின்றனர். இத்திட்டம் கடந்த 2 ஆண்டுகளில் ரூ.1.21 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- 28 தகைசால் பள்ளிகளில் வகுப்பு 6 முதல் 9 மற்றும் 11 பயிலும் மாணவர்களுக்கு 5 நாள்கள் **குளிர்கால உண்டு உறைவிட முகாம்** STEM மற்றும் தலைமைப் பண்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ரூ.21.45 இலட்சம் மதிப்பீட்டில் நடத்தப்பட்டது. பள்ளி ஒன்றுக்கு 25 மாணவர்கள் வீதம் 700 மாணவர்கள் மற்றும் 140 ஆசிரியர்கள் பயனடைந்தனர்.

- தமிழர்களின் உணர்வோடு கலந்திருக்கும் கலைகளை உயிர்ப்போடு வைத்திருக்கவும் மாணவர்களின் கலைத்திறன்களை ஊக்குவிக்கவும் ஆண்டுதோறும் ரூ.5.35 கோடி நிதி ஒதுக்கீட்டில் **கலைத் திருவிழா** போட்டிகள் 2022–23ஆம் ஆண்டில் அரசுப் பள்ளிகளில் தொடங்கப்பட்டது. தற்போது இதில் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்கள் கலந்துகொண்டு தங்கள் தனித்திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர். இதுவரை ரூ.16.05 கோடி நிதி ஒதுக்கீட்டில் 1 கோடியே 15 இலட்சத்து 48 ஆயிரம் மாணவ மாணவியர் பள்ளி அளவில் பங்கேற்றுள்ளனர். 2022–23ஆம் ஆண்டு முதல் இதுவரை மாநில அளவில் வெற்றி பெற்ற 34 மாணவர்களுக்கு கலையரசன், கலையரசி என்ற விருதும் சான்றிதழும் பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இவர்கள் வெளிநாட்டுக் கல்விச் சுற்றுலாவிற்கும் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.
- **14417 மாணவர் உதவி மையம்,** மாணவர்களுக்குக் கல்விசார் உதவி மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்குவதை நோக்கமாகக்

கொண்டுள்ளது. மாணவர்கள் கல்வியில் வெற்றி பெறவும் மேலும், எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ளவும் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில் வெளி அழைப்புகளாக 19,39,633 அழைப்புகள் பெறப்பட்டு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

2023 – 24 முதல் ரூ. 4.1 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- Digital கல்வியை மேம்படுத்தும் வகையில் 31,129 அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் 79,723 இடைநிலை மற்றும் பட்டதாரி **ஆசிரியர்களுக்கு ரூ.81 கோடி மதிப்பீட்டில் கைக்கணினிகள்** வழங்கப்பட்டுள்ளன.
- பள்ளி மாணவிகள் எந்த ஒரு சூழலையும் பக்குவமாக எதிர்கொள்ளும் ஆற்றலைப் பெறவும் தன்னம்பிக்கை மற்றும் தற்காப்புத் திறனை வளர்க்கும் வகையிலும், இடைநிற்றல் இல்லாமல் கல்வியைத் தொடரவும் Karate, Judo, Taekwondo, Silambam ஆகிய **தற்காப்புக் கலைப்பயிற்சிகள்** வழங்கப்படுகின்றன. 6941 அரசு நடுநிலைப் பள்ளிகளில் 6 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும்

மாணவிகளுக்கும் 6267 உயர்/மேல் நிலைப் பள்ளிகளில் 6 முதல் 10 வகுப்பு வரை பயிலும் மாணவிகளுக்கும் 3 மாதங்களுக்குப் பயிற்சி தரப்படுகிறது. பள்ளிக்கு ரூ.15000 (3 x 5000) வீதம் மொத்தம் 13208 பள்ளிகளுக்கு ரூ.19 கோடியே 81 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் சுமார் 13 இலட்சம் மாணவிகள் ஆண்டுதோறும் பயனடைந்து வருகின்றனர்.

- அரசுப்பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்றுள்ளனர். 2023–24ஆம் கல்வியாண்டில் மாணவர்களின் **உயர்கல்விச் சேர்க்கை** 47%லிருந்து 74% ஆக உயர்ந்துள்ளது. இது தேசிய சராசரியான 28% விட 46% அதிகமாகும்.
- கல்வியில் தமிழ்நாட்டை உலக அளவில் உயர்த்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முன்னெடுப்புகள் காரணமாக இந்தியா (IIT, IIM) மற்றும் பிற நாடுகளின் புகழ்பெற்ற பல்கலைக் கழகங்கள் போன்ற **முதன்மை உயர்கல்வி நிறுவனங்க**ளில் 2021–22இல் 12ஆம் வகுப்பு பயின்ற 75 மாணவர்களும் 2022–23இல் 274 மாணவர்களும் 2023–24இல் 628 மாணவர்களும் கல்வி பயின்று வருகின்றனர்.

இதுவரை உள்நாட்டில் 961 பேரும் அயல்நாட்டில் 16 பேரும் சேர்ந்துள்ளனர். இக்கல்வியாண்டில் உள்நாட்டில் பயிலும் மாணவர்களின் இளங்கலைப் படிப்பிற்கான கல்விக் கட்டணத்தையும் வெளிநாட்டில் முழுமையான கல்வி உதவித் தொகை பெற்று கல்வி பயிலச் செல்லும் மாணவர்களின் முதல் பயணக் கட்டணத்தையும் வழங்க தமிழ்நாடு அரசு ரூ. 6.23 கோடி அனுமதித்துள்ளது.

- சமத்துவம் மற்றும் முற்போக்குக் கல்விக்கான தரத்தினை உறுதி செய்யும் வகையில் மாவட்டத்திற்கு ஒன்றாக 38 **மாதிரிப் பள்ளிகள்** ரூ.352.42 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 9ஆம் வகுப்பில் 762 மாணவர்கள், 10 ஆம் வகுப்பில் 1,664 மாணவர்கள், 11ஆம் வகுப்பில் 4,329 மாணவர்கள், 12ஆம் வகுப்பில் 3,838 மாணவர்கள் என 2024–25ஆம் கல்வியாண்டில் மொத்தம் 10,593 மாணவர்கள் இனச் சுழற்சி அடிப்படையில் (Communal Rotation Basis) சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் 5,439 மாணவர்கள் தமிழ் வழியிலும் 5,154 மாணவர்கள் ஆங்கில வழியிலும் பயின்று வருகின்றனர்.

➤ **நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி** திட்டத்தின் மூலம் இதுவரை ரூ.658.67 கோடிக்கு மேல் திரட்டி அரசுப் பள்ளிகளின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

| நன்கொடை பெற்ற முறை | ரூபாய் (கோடியில்) | பயன் அடைந்த பள்ளிகள் |
|---|---|---|
| நிதியாக | 65.28 | 1398 |
| பொருட்களாக | 355.90 | 3802 |
| தன்னார்வ சேவை | 237.49 | 6390 |
| **மொத்தம்** | **658.67** | **11590** |

இத்திட்டத்தின் வாயிலாக பல்வேறு வகையான உட்கட்டமைப்பு வசதிகள், திறன் மிகு வகுப்பறைகள், STEM ஆய்வகங்கள், உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள் எனப் பல்வேறு பணிகள் பின்வருமாறு நடைபெற்று வருகின்றன.

| வ. எண் | பணிகள் | மொத்த பணிகள் | பணி முடிந்தவை | நடை பெறுபவை | தொடங்கப்பட உள்ளவை |
|---|---|---|---|---|---|
| 1 | கழிப்பறைகள் | 861 | 633 | 195 | 33 |
| 2 | கழிப்பறைகள் பழுதுபார்த்தல் | 519 | 467 | 45 | 7 |
| 3 | கூடுதல் வகுப்பறைகள் | 462 | 207 | 157 | 98 |
| 4 | கூடுதல் வகுப்பறைகள் பழுதுபார்த்தல் | 515 | 390 | 71 | 54 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் | 15 | 14 | 1 | 0 |
| 6 | திறன் மிகு வகுப்பறைகள் | 1112 | 1013 | 52 | 47 |
| **மொத்தம்** | | **3484** | **2724** | **521** | **239** |

- மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு, தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் உயர்தரமான மின்னிய உள்ளடக்கங்களை வழங்குவதற்காக **மணற்கேணி** என்ற டிஜிட்டல் கல்வி தளம் 2023இல் தொடங்கப்பட்டது. இது 6,895 2D மற்றும் 3D அனிமேஷன் வீடியோக்களை உள்ளடக்கிய விரிவான கற்றல் வள நூலகத்தையும் பயிற்சிக்காக 2,01,880 கேள்விகளையும் கொண்டுள்ளது. அனைத்து உள்ளடக்கங்களும் SCERT பாடங்களின் வரிசைப்படுத்தலில் (Taxonomy) உள்ள 23,000 தலைப்புடன் இணைக்கப்பட்டுள்ளன. மணற்கேணி செயலி 8,91,261–க்கும் அதிகமான முறை பதிவிறக்கம் செய்யப்பட்டு 4.1 அளவிலான (Star Rating) மதிப்பீட்டைப் பெற்றுள்ளது,
- 2,211 பள்ளிகள் நூற்றாண்டைக் கடந்து பல கோடி மாணவர்களுக்கு வழிகாட்டி, இன்றும்

நம்பிக்கையின் அடையாளமாகத் திகழ்ந்து வருகின்றன. கல்விக் கனவை நிறைவேற்றும் பொறுப்பில் தமிழ்நாடு அரசும், அரசுப் பள்ளிகளும் எப்போதும் முன்னிற்கின்றன என்பதற்கு இதுவே தக்க சான்று. 2025 ஜனவரி 22ஆம் தேதி நாகப்பட்டினம் மாவட்டம் திருக்குவளை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் **நூறாண்டு கண்ட பள்ளிகளின் நூற்றாண்டுத் திருவிழா** தொடங்கி வைக்கப்பட்டு, தற்போது வரை 883 பள்ளிகளில் இவ்விழா நடந்து முடிந்துள்ளது. இப்பள்ளிகளில் ரூ. 3.60 கோடி மதிப்பில் உட்கட்டமைப்பு மேம்பாடு, பராமரிப்பு போன்ற பள்ளியின் தேவைகளை சமூகப் பங்கேற்போடு உறுதிசெய்துள்ளது.

- தமிழ்நாட்டில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு உயர்கல்வியில் புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தவும், அவர்கள் ஐஐடி போன்ற முன்னணி நிறுவனங்களில் பயில வழிவகுக்கவும் **அனைவருக்கும் ஐஐடி திட்டம்** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட

மாணவர்களுக்கு வழிகாட்டும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. 363 மாணவர்கள், தாங்கள் விரும்பிய உயர் கல்விப் படிப்புடன் இணைந்து ஐஐடி மெட்ராஸ் BS – Data Science பட்டப் படிப்பையும் தொடர்கின்றனர்.

| ஆண்டு | தகுதிபெற்ற மாணவர்கள் | | மொத்தம் தகுதிபெற்ற மாணவர்கள் | பயின்று வரும் மாணவர்கள் |
|---|---|---|---|---|
| | அரசுப் பள்ளி | அரசு உதவிபெறும் பள்ளி | | |
| 2021 | | 10 | 10 | 4 |
| 2022 | 71 | 36 | 107 | 48 |
| 2023 | 176 | 76 | 252 | 136 |
| 2024 | 94 | 133 | 227 | 175 |
| 2025 | 3 | 11 | 14 | |
| **மொத்தம்** | **344** | **266** | **610** | **363** |

## *தனியார் பள்ளிகள் இயக்ககம்*

- **தனியார் பள்ளிகளுக்கெனத் தனி இயக்ககம்** உருவாக்கப்பட்டு ஜனவரி 2023 முதல் செயல்பட்டு வருகிறது.
- தமிழ்நாடு தமிழ் கற்கும் சட்டம் 2006இன்படி 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள்

அனைவரும் தமிழ்மொழியைக் கட்டாயப் பாடமாகப் பயில வேண்டும். இதன் தொடர்ச்சியாக CBSE மற்றும் **பிற வாரியப் பள்ளிகளில் பணிபுரியும் சுமார் 3,565 தமிழ் ஆசிரியர்களுக்குப் பயிற்சி** அளிக்கப்பட்டுள்ளது.

- தமிழ்வழிக் கல்வியை ஊக்குவிக்கும் வண்ணம் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கல்வி உபகரணங்கள், பாடநூல், நோட்டுப் புத்தகம், புத்தகப் பை மற்றும் இதர **நலத்திட்ட உதவிகள், தனியார் சுயநிதிப் பள்ளிகளில்** 1 முதல் 10ஆம் வகுப்பு வரை **தமிழ்வழியில்** பயிலும் மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதனைச் செயல்படுத்த 2023-24ஆம் கல்வியாண்டில் ரூ.2.81 கோடியும், 2024-2025ஆம் ஆண்டில் ரூ.3.33 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2023-2024ஆம் கல்வியாண்டில், பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை 47,661 ஆகும். தற்போது 2024-2025ஆம் கல்வியாண்டில், பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை 49,498 ஆகும். இதன்படி கடந்தாண்டைவிட 1,837 மாணவர்கள் கூடுதலாகப் பயனடைந்துள்ளனர்.

- 2023-24ஆம் கல்வியாண்டில் தனியார் பள்ளிகளில் பயின்று சர்வதேச, தேசிய மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்ற 2641 மாணவ / மாணவியர்களுக்கும் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் 100% தேர்ச்சி பெற்ற தனியார் பள்ளிகளுக்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

***<u>மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்</u>***

- தமிழர் நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம், தொன்மையின் சிறப்பு மற்றும் தமிழகமெங்கும் விரவியிருக்கும் தொல்லியல் தலங்கள் குறித்த தகவல்களை மாணவர்களுக்குச் சிறப்பாகக் கொண்டு சேர்க்கும் வண்ணம் 2023-24ஆம் கல்வியாண்டில் அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் தேர்ந்தெடுக்கப்பட்ட 1000 பட்டதாரி ஆசிரியர்களுக்கும், 2024-25ஆம் கல்வியாண்டில் 1000 பட்டதாரி ஆசிரியர்களுக்கும் ஆக மொத்தம் 2000 ஆசிரியர்களுக்கு ரூ.5 கோடி மதிப்பீட்டில் 6

நாட்கள் **தொல்லியல் பயிற்சி** வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் சுமார் 70,000 மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

- மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் **கல்வித் தொலைக்காட்சி** மூலம் 1 முதல் 12ஆம் வகுப்பு வரையிலான பாடங்களை காணொலிகளாக உருவாக்கி ஒளிபரப்பு செய்து வருகிறது. நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி காணொலிகள் தயாரிப்பதற்காக, மெய்நிகர் ஒளிப்பதிவுக்கூடம் உள்ளிட்ட 5 உயர்தொழில்நுட்பப் படப்பதிவுக் கூடங்கள் மற்றும் ஒரு ஒலிப்பதிவுக்கூடம் நவீனமுறையில் ரூ.7 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளது. தொலைவிலுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மற்றும் இயற்கைச் சூழல் மிக்க இடங்களுக்குச் செல்லாமலேயே நேரடியாக ஒளிப்பதிவுக் கூடத்தின் மூலம் மாணவர்களின் கண்முன் காட்சிகளைக் கொண்டுவந்து ஆர்வமுடன் அறிந்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- பார்வைக் குறைபாடுள்ள மாற்றுத்திறன் மாணவர்களுக்காக அவர்களும் மற்ற சக மாணவர்கள் போலவே பாடக் கருத்துகளை

அணுகும் வகையில் **அணுகக்கூடிய மின்னுரு பாடப்புத்தகங்கள்** உருவாக்கப்பட்டுள்ளன. அவை adt.tnschools.gov.in என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு அம்மாணவர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

***அரசுத் தேர்வுகள் இயக்ககம்***

- **மிக்ஜாம் மற்றும் ஃபெங்கல்** புயல்களால் ஏற்பட்ட பாதிப்பில் தங்கள் அசல் மதிப்பெண் சான்றிதழ்களை இழந்த 6,614 மாணவர்களுக்கு **இரண்டாம்படி (Duplicate copy) மதிப்பெண் சான்றிதழ்கள் கட்டணமின்றி வழங்கப்பட்டன.**

***பள்ளி சாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககம்***

- 2021–22ஆம் ஆண்டு முதல் 2024–25ஆம் ஆண்டு வரை பல்வேறு **வயதுவந்தோர் கல்வித் திட்டங்கள்** மொத்தம் ரூ.39.21 கோடி மதிப்பீட்டில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டதன் வாயிலாக 20 இலட்சம் கற்போர் பயனடைந்துள்ளனர்.

***ஆசிரியர் தேர்வு வாரியம்***

- செப்டம்பர் 2021 அறிவிப்பாணை மூலம் பிப்ரவரி 2022இல் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் கணினி வழியாக நடத்தப்பட்ட போட்டித்தேர்வு மூலம்

**3,087 முதுகலை ஆசிரியர்கள்** தெரிவு செய்யப்பட்டு, சார்ந்த துறைகளால் பணிநியமனம் வழங்கப்பட்டது.

- 2021–22ஆம் ஆண்டில் 96 **வட்டாரக் கல்வி அலுவலர்** பணியிடங்களுக்கும், 2023–24ஆம் ஆண்டில் 33 வட்டாரக்கல்வி அலுவலர் பணியிடங்களுக்கும் தேர்வுகள் நடத்தப்பட்டு, மொத்தம் 129 பேருக்குப் பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டன.
- **3192 பட்டதாரி ஆசிரியர் / வட்டார வள மையப் பயிற்றுநர்** பணியிடங்களுக்கான பணிநாடுநர்களைத் தெரிவு செய்வதற்குரிய தேர்வு நடத்தப்பட்டு, தகுதியான பணிநாடுநர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
- 2022–2023ஆம் கல்வியாண்டில் அரசு **பல்தொழில் நுட்பக் கல்லூரி விரிவுரையாளர்** பணிக்காக 1038 பணியிடங்களுக்குத் தகுதியான பணிநாடுநர்கள் தெரிவு செய்து ஆசிரியர் தேர்வு வாரியத்தால், சார்ந்த துறைக்கு அனுப்பப்பட்டு பணி நியமனங்கள் வழங்கப்பட்டது.
- **உதவிப் பேராசிரியர்களுக்கான மாநிலத் தகுதித் தேர்வு** (SET) ஆசிரியர் தேர்வு வாரியத்தால் 2025,

மார்ச் 6 முதல் 9 வரை நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

***பொது நூலக இயக்ககம்***

- மாண்புமிகு முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பெயரில் சர்வதேசத் தரத்தில், **கலைஞர் நூற்றாண்டு நூலகம்** மதுரையில் ரூ.218.19 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டு, 3,64,521 புத்தகங்களுடன் செயல்பட்டு வருகிறது. 2024–25ஆம் ஆண்டில் சுமார் 16,55,820 வாசகர்கள் பயனடைந்துள்ளனர்.
- தமிழ் மொழிக்கு அளப்பரிய பங்களிப்பைச் செய்து, மதிப்புமிக்க விருதுகளைப் பெற்ற தமிழ் எழுத்தாளர்களைக் கௌரவிக்கும் வகையில், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் **செந்தமிழ்ச் சிற்பிகள் அரங்கம்** நிறுவப்பட்டுள்ளது. இதுவரை 25,816 வாசகர்கள் பார்வையிட்டுள்ளனர்.
- இந்திய நூலகவியலின் தந்தை **பத்மஸ்ரீ டாக்டர் எஸ்.ஆர்.அரங்கநாதன்** அவர்களின் நினைவாக சீர்காழியில் ரூ.1.32 கோடி மதிப்பீட்டில் ஒரு நூலகம் கட்டப்பட்டுள்ளது.

- புகழ்பெற்ற கவிஞுர் செந்நாப் புலவர் **ஆ. கார்மேகனார்** அவர்களின் பெயரில் ராமநாதபுரம் மாவட்டம் அபிராமத்தில் கிளை நூலகத்திற்கு ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது.
- மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் புத்தகங்களில் சொல்லப்பட்டுள்ள செய்திகளை வாசிப்பதைக் காட்டிலும், மெய்நிகர் Virtual Reality தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி 360 டிகிரி கோணத்தில் அவற்றைப் பார்த்து அறிந்துகொள்ள 38 மாவட்டங்களில் முதற்கட்டமாக 76 நூலகங்களில் ஒவ்வொரு நூலகத்திற்கும் தலா இரண்டு என 152 **மெய்நிகர் நூலகக் கருவிகள் ரூ. 57.20 இலட்சம் மதிப்பீட்டில்** நிறுவப்பட்டுள்ளன. இதன்மூலம் இதுவரை 32,712 குழந்தைகள் மற்றும் பள்ளி மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.
- கிண்டில்(Kindle) செயலியில் உள்ள 10 இலட்சம் நூல்களை அரசுப் பொது நூலகங்களில் அமர்ந்து படிக்க உதவும் ஒரு திட்டம் மாணவர்களுக்காகவும், பொது மக்களுக்காகவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அறிவுசார் தேடலை மேம்படுத்த தமிழ்நாடு முழுவதும் உள்ள

3,878 பொது நூலகங்களுள் முதற்கட்டமாக 1,469 **பொது நூலகங்களுக்கு WI-FI வசதி கொண்ட** மின் நூலக சேவைகள் வழங்கப்பட்டுள்ளன. இதுவரை 18,50,123 வாசகர்கள் மற்றும் போட்டித்தேர்வர்கள் இதன் மூலம் பயனடைந்துள்ளனர்.

➢ வாசிப்பை ஒரு மக்கள் இயக்கமாக ஊக்குவிக்கும் வகையில், 2022-23ஆம் ஆண்டு முதல் தமிழகத்தின் **அனைத்து மாவட்டங்களிலும் புத்தகக் கண்காட்சிகள்** நடத்தப்பட்டன.

| ஆண்டு | மாவட்டங்கள் | நிதி (கோடி) | வாசகர்கள் வருகை (இலட்சம்) | விற்பனையான நூல்களின் எண்ணிக்கை (இலட்சம்) | விற்பனை தொகை (கோடி) |
|---|---|---|---|---|---|
| 2022-23 | 37 | 4.96 | 52 | 45 | 34.40 |
| 2023-24 | 35 | 8.45 | 34 | 36 | 34.8 |
| 2024-25 | 37 | 8.45 | 39 | 38 | 36.20 |
| | **மொத்தம்** | **21.86** | **125** | **119** | **105.4** |

➢ தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கம் மூலம் சென்னையில் நடத்தப்படும் புத்தகக்கண்காட்சிக்குத் தமிழ்நாடு அரசு ஆண்டு தோறும் ரூ.75 இலட்சம் நிதியுதவி வழங்கிவருகிறது. ஜனவரி 2025 புத்தகக்

கண்காட்சியில் சுமார் 10 இலட்சம் பேர் வருகைபுரிந்து பயனடைந்தனர். இதில் ரூ.20 கோடி மதிப்பில் நூல்கள் விற்பனை செய்யப்பட்டன.

- தமிழ்நாட்டில் இலக்கியச் செழுமைமிக்க தமிழ் மொழியின் இலக்கிய மரபுகளைக் கொண்டாடும் வகையில் சென்னை, வைகை, காவேரி, பொருநை மற்றும் சிறுவாணி என ஐந்து இலக்கியத் திருவிழாக்களுடன் அனைத்து மாவட்டங்களிலும் இளைஞர் இலக்கியத் திருவிழாக்கள் சிறப்பாக நடத்தப்படுகின்றன. 2022–2023ஆம் ஆண்டில் ரூ.63.50 இலட்சம், 2023–2024ஆம் ஆண்டில் ரூ.1.82 கோடி, 2024–2025ஆம் ஆண்டில் ரூ.1.82 கோடி என மொத்தம் ரூ. 4.28 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.
- நமது செழுமையான தமிழ் இலக்கியப் படைப்புகளை உலகம் முழுவதும் எடுத்துச் செல்லவும், சிறந்த பன்னாட்டு எழுத்தாளர்களின் படைப்புகளை தமிழ்மொழிக்குக்கொண்டு வரவும், 2023–ஆம் ஆண்டு முதல் சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா (CIBF) ரூ.6 கோடி மதிப்பீட்டில் வெற்றிகரமாக நடத்தப்பட்டுவருகிறது.

| ஆண்டு | நாடுகள் | மொழிகள் | தமிழில் இருந்து பிற மொழி | பிற மொழியில் இருந்து தமிழில் | இரு வகையிலும் | MoU |
|---|---|---|---|---|---|---|
| 2023 | 24 | 15 | 150 | 170 | 45 | 365 |
| 2024 | 40 | 39 | 521 | 229 | 2 | 752 |
| 2025 | 64 | 50+ | 1209 | 145 | – | 1354 |
| மொத்தம் | | | 1880 | 544 | 47 | 2471 |

- உலக அளவில் பல்வேறு துறைகளில் ஏற்படும் நவீன மாற்றங்களைப் பற்றி தமிழர்கள்/வாசகர்கள் அறிந்து கொள்ளும் வகையில் TN Talk என்ற பெயரில் சர்வதேச அளவில் பல்துறை நிபுணர்கள், அறிவியல் ஆய்வாளர்கள் மற்றும் புகழ்பெற்ற அறிஞர்கள் தங்களின் கருத்தைப் பகிர்ந்துகொள்ளும் நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. இது அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இதுவரை 25 நிகழ்ச்சிகள் சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.
- கடந்த 4 ஆண்டுகளில் பொது நூலக இயக்ககத்தின்கீழ் நேரடி நியமனம் மூலம் மாவட்ட நூலக அலுவலர், நூலகர் மற்றும் தகவல்

அலுவலர், தகவல் உதவியாளர் உள்ளிட்ட 25 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. மேலும், கருணை அடிப்படையில் 32 பேருக்கும் பார்வை மாற்றுத்திறனாளிகள் 32 பேருக்கும் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

- ஊர்ப்புற நூலகங்களில் சிறப்பு காலமுறை ஊதியம் (நிலை–4 ரூ.7700–24200) முறையில் பணியாற்றிய 446 ஊர்ப்புற நூலகர்களுக்கு முறையான ஊதியம் (நிலை–8 ரூ.19500 – 71900) என்ற முறையில் கலந்தாய்வின் மூலம், மூன்றாம் நிலை நூலகர்களாக நிலை உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

***தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்***

- தமிழ் இலக்கியம் மற்றும் வரலாற்று நூல்களை ஆங்கிலம் உள்ளிட்ட பிறமொழிகளுக்கு மொழிபெயர்த்து வெளியிடும், திசைதோறும் திராவிடம் திட்டத்தின்கீழ் 68 நூல்கள் ரூ.3.43 கோடி மதிப்பீட்டில் வெளியிடப்பட்டுள்ளன.
- மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம், கலை, இலக்கியம் மற்றும் அறிவியல் நூல்களை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்து

வெளியிடும், முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டத்தின் மூலம் 139 நூல்கள் ரூ. 3.06 கோடி மதிப்பீட்டில் வெளியிடப்பட்டுள்ளன.

- வகுப்பறைக் கற்றலுக்கு அப்பால், வயதுக்கேற்ற புத்தகங்களை வாசிக்கும் ஆர்வத்தை சிறார்களிடம் தூண்டும் இளந்தளிர் இலக்கியத் திட்டத்தின் கீழ் 138 நூல்கள் ரூ. 26.95 இலட்சம் மதிப்பீட்டில் வெளியிடப்பட்டுள்ளன.
- தமிழில் உலக சிறார் இலக்கியங்கள் எனும் திட்டத்தின்கீழ் 22 நூல்கள் ரூ.8.24 இலட்சம் மதிப்பீட்டில் வெளியிடப்பட்டுள்ளன.
- வ.உ.சி. நூல்களின் தொகுப்பு, 4 தொகுதிகளாக ரூ.2.57 இலட்சம் மதிப்பீட்டில் வெளியிடப்பட்டுள்ளது.
- கலைக் களஞ்சியம் மற்றும் சிறார் களஞ்சியம் 20 தொகுதிகள் ஆவணப்பதிப்பாக ரூ.36,000/– மதிப்பீட்டில் வெளியிடப்பட்டுள்ளன.
- நாளைய தலைமுறைக்கு நாட்டுடைமை நூல்கள் வரிசையில் புகழ்பெற்ற படைப்பாளிகளின் 36 நூல்கள் ரூ.4.13 இலட்சம் மதிப்பீட்டில் வெளியிடப்பட்டுள்ளன.

- நூற்றாண்டு காணும் ஆளுமைகளின் தொகுப்பு வரிசையில் 7 நூல்கள் ரூ. 8.86 இலட்சம் மதிப்பீட்டில் வெளியிடப்பட்டுள்ளன.
- ஆங்கிலத்தில் தமிழ் நூல்கள் திட்டத்தின்கீழ், 12 நூல்கள் ரூ.7.57 இலட்சம் மதிப்பீட்டில் வெளியிடப்பட்டுள்ளன.
- இந்திய மற்றும் பன்னாட்டு மொழிகளில் பெரியார் சிந்தனைகள் மொழிபெயர்ப்பு திட்டத்தின்கீழ், 20 நூல்கள் ரூ.50.25 இலட்சம் மதிப்பீட்டில் வெளியிடப்பட்டுள்ளன.
- செவ்விலக்கியங்கள் வரிசையில் 14 சங்க இலக்கிய நூல்கள் ரூ. 4.70 இலட்சம் மதிப்பீட்டில் வெளியிடப்பட்டுள்ளன.
- 2023 ஜனவரி முதல் ஆண்டுக்கு ரூ. 7.15 கோடி நிதி ஒதுக்கீட்டில் 69,207 புது ஊஞ்சல் மற்றும் 70,188 தேன்சிட்டு சிறார் இதழ்கள் மாதமிருமுறை அரசுப்பள்ளிகளில் முறையே 4&5 மற்றும் 6–9 வகுப்பு மாணவர்களுக்கு 'வகுப்பறைக்கு ஒன்று' என்ற வகையிலும் ஆசிரியர்களுக்காக, கனவு ஆசிரியர் மாத இதழ் 'ஒவ்வொரு அரசுப்பள்ளிக்கும் ஒன்று' என்ற வகையில் 37,556 பள்ளிகளுக்கும் அஞ்சல் சலுகையுடன் அனுப்பப்படுகிறது. சுயநிதிப் பள்ளிகள் சந்தா செலுத்தி அஞ்சலில்

பெற்றுக் கொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- தமிழின் தொன்மையை உலகறியச் செய்யும் தமிழ்–இந்தோ–ஐரோப்பிய மொழிகளின் வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதித் திட்டத்தின் கீழ் ஆய்வு முடிவுகளை 12 தொகுதிகளாக வெளியிட ஆக்சுபோர்டு பல்கலைக்கழகப் பதிப்புத்துறையுடன் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் ஒப்பந்தம் செய்துள்ளது. இத்திட்டத்திற்கு ரூ. 8 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் முதல் கட்டமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அகராதிக்கான முன்னுரையும் முதல் தொகுதியும் 25.03.2025 அன்று வெளியிடப்பட்டுள்ளன.

# 3. தொடக்கக்கல்வி, பள்ளிக்கல்வி மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி

## 3.1 அறிமுகம்

பள்ளிக் குழந்தைகள் எத்தகைய இடையூறும் இன்றி ஆர்வத்தோடு கல்வி பயிலும் வகையில் வகுப்பறைச் சூழலை உருவாக்குவதுடன், தரமான கல்வியை வழங்குதல், வகுப்பறையில் புதிய தொழில்நுட்பக் கருவிகள் மற்றும் உபகரணங்களைப் பயன்படுத்துதல், ஒரே சீரான கற்றல் வாய்ப்புகளை அனைவருக்கும் வழங்குவதன் வாயிலாக மாணவர்களின் திறமை மற்றும் வளர்ச்சியினை மேம்படுத்துதல் உள்ளிட்டவை தொடக்கக் கல்வி பள்ளிக் கல்வி மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி ஆகியவற்றின் தொலைநோக்குப் பார்வையாகும்.

## 3.2 நோக்கங்கள்

- பள்ளி செல்லும் வயதுடைய குழந்தைகளைக் கண்டறிந்து, அவர்களை அருகாமையில் உள்ள பள்ளிகளில் சேர்ப்பதை உறுதி செய்தல்.

- பள்ளியில் சேர்ந்த குழந்தைகள் அனைவரையும் தக்க வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- பள்ளிகளில் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.
- அனைத்து பள்ளிகளிலும் இணைய வசதியுடன் கூடிய திறன்மிகு வகுப்பறைகளை அமைத்தல்.
- உயர்தரமான கல்வியை வழங்கும் பொருட்டு நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய மேம்படுத்தப்பட்ட உயர் தொழில்நுட்ப ஆய்வகங்களை உருவாக்குதல்.
- மாணவர்களிடையே சமூக மற்றும் பாலின சமத்துவத்தை உறுதிசெய்து, அனைவருக்கும் ஒரே மாதிரியான கல்வியை வழங்குதல்.
- மாணவர்களுக்கு வேலை வாய்ப்புகளுக்கு ஏற்ற தொழிற்கல்வியை வழங்குதல்
- போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற மாணவர்களுக்குப் பயிற்சி அளித்து அவர்களின் உயர்கல்விக்கான அணுகலை உறுதி செய்தல்.

- பள்ளி வளாகத்திற்குள் மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல்.
- குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கான உரிமையை உறுதி செய்தல்.
- பள்ளிகளில் கற்றல்–கற்பித்தல் சூழலை மேம்படுத்துவதன் மூலம் தரமான கல்வியை உறுதி செய்தல்.
- மாணவர்களிடையே அறிவியல் மனப்பான்மையை வளர்க்க செயல் திட்ட அடிப்படையிலான கற்றல் சூழலை உருவாக்குதல்.
- பள்ளியில் உள்ள ஒவ்வொரு குழந்தையும் தனது மேல்நிலைக் கல்வியை முடித்து உயர்கல்வியில் சேர்வதை உறுதி செய்தல்.

### 3.3 திட்டங்கள்

மாணவர் சேர்க்கையை அதிகரிக்கவும், இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வியை முடிக்கும் வரை பள்ளிக் கல்வியில் அவர்களைத் தக்கவைக்கவும், மாணவர் நலத்திட்டங்கள் மூலம் முன்முயற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### *3.3.1 மாதிரிப் பள்ளிகள்*

தமிழ்நாட்டுப் பள்ளிக் கல்வியில் முற்போக்கான கல்விக்கான அளவுகோல்களை அமைக்கும் வகையில் 9 முதல் 12 வகுப்பு வரை மாணவர்கள் பயிலும் வகையில் 38 மாவட்டங்களிலும் தலா ஒரு பள்ளி வீதம் அரசு மாதிரி உண்டு உறைவிடப் பள்ளிகள் உருவாக்கப்பட்டுள்ளன. அரசுப் பள்ளிகளில் பயின்றுவரும் தனித்திறன் மிக்க மாணவர்களிலிருந்து அவர்களது ஒட்டுமொத்த செயல்திறன்கள் அடிப்படையில் அனைத்துப் பிரிவினருக்கும் இப்பள்ளிகளில் பயில உரிய வாய்ப்பினை அளிக்கும் வகையில் மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு அவர்களது விருப்பம் மற்றும் திறமைக்கேற்ப உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற ஏதுவாக சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்படுவதுடன் அவர்களது ஒட்டுமொத்த ஆளுமைத் திறனை உறுதிப்படுத்தும் வகையில் சிறப்புத் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### *3.3.2 தகைசால் பள்ளிகள்*

அரசுப் பள்ளி மாணவர்களின் கற்றல் சூழலை மேம்படுத்தி, அவர்கள் கற்றலில் சிறந்து விளங்குவதை ஊக்குவிக்கும் வகையில் 2022–23ஆம் கல்வியாண்டில் 28 அரசுப் பள்ளிகள் தகைசால் பள்ளிகளாக மேம்படுத்தப்பட்டன. பள்ளி உட்கட்டமைப்பினை மேம்படுத்துதல், நவீன தொழில்நுட்பங்களின் அடிப்படையிலான வகுப்பறைச் சூழலை உருவாக்குதல், கல்வி இணைச் செயல்பாடுகள் மற்றும் மாணவர்களின் தனித்திறன் மேம்பாட்டிற்குத் தேவையான கட்டமைப்பினை நிறுவுதல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### *3.3.3 உள்ளடக்கிய கல்வி*

ஒவ்வொரு பள்ளி செல்லும் வயதுடைய குழந்தைக்கும் சமமான மற்றும் தரமான கல்வி வாய்ப்பினை வழங்கவும், குறைபாடுகள் காரணமாக எந்தக் குழந்தையும் கல்வியிலிருந்து விலக்கப்படுவதில்லை என்பதை உறுதிசெய்யவும், பள்ளிக் கல்வித் துறை பல குறிப்பிடத்தக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இம்முயற்சியின் முக்கிய அம்சமாக மாற்றுத்திறனாளிக் குழந்தைகளுக்கு ஆண்டுதோறும் வட்டார அளவில் சார்ந்த துறைகளின் ஒத்துழைப்புடன் மருத்துவ அளவீட்டு முகாம்கள் நடத்தப்படுகின்றன. இந்த முகாம்களில் மாற்றுத்திறனாளிக் குழந்தைகளைப் பரிசோதித்தல், தேவையான அடையாள அட்டைகள் பெற்று வழங்குதல்/புதுப்பித்தல், அறுவை சிகிச்சைகள், கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்குதலுக்கான பரிந்துரைகள் வழங்குதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மாற்றுத்திறனாளிக் குழந்தைகள் தவறாமல் பள்ளிக்குச் செல்வதை ஊக்கப்படுத்த, போக்குவரத்து மற்றும் பாதுகாவலர் படி, மாற்றுத்திறனாளிப் பெண் குழந்தைகளுக்கு ஊக்கத்தொகை ஆகியன வழங்கப்படுகின்றன. தீவிர குறைபாடுகள் கொண்ட குழந்தைகளுக்கு வீட்டிற்கே சென்று சிறப்புப் பயிற்றுநர்கள் மற்றும் இயன்முறை மருத்துவர்கள் மூலம் முறையே சிறப்புக்கல்வி மற்றும் இயன்முறைப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

### 3.3.4 கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா ( KGBV)

பெண் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கும் விதமாக கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா எனும் சிறப்புத் திட்டம் 15 மாவட்டங்களில் பெண் கல்வியில் பின்தங்கியுள்ள 44 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 61 உண்டு உறைவிடப் பள்ளிகளும், 44 மாணவியர் விடுதிகளும் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டம் கல்வியில் பாலினப் பாகுபாட்டைக் குறைப்பதற்கு வழிவகுத்துள்ளது.

8ஆம் வகுப்பினை முடிக்கும் மாணவிகள் இடைநிற்றல் இன்றி இடைநிலைக் கல்வியினை அருகில் உள்ள பள்ளிகளில் பயிலும் விதமாக 14 வயது முடிந்த 18 வயதிற்கு உட்பட்ட பெண் குழந்தைகளுக்கு விடுதி வசதியும் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் இப்பெண் குழந்தைகள் கல்வி கற்பதை ஊக்குவிக்கும் விதமாக மாதந்தோறும் ரூ.200/- ஊக்கத் தொகையாக அவர்கள் வங்கிக் கணக்கிற்கு நேரடியாகச் செலுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் 9850 மாணவிகள் பயனடைந்து வருகிறார்கள். 2024-25ஆம்

ஆண்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.57.89 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது நிலையான வளர்ச்சி இலக்கில் பாலின சமத்துவத்திற்கான 4.5.1 இலக்கின் குறியீட்டினை அதிகரிக்க உதவுகிறது.

### *3.3.5 நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவிஷ்ய வித்யாலயா உண்டு உறைவிடப் பள்ளி – (NSCBAV)*

தமிழ்நாட்டில் 11 மாவட்டங்களில் 15 உண்டு உறைவிடப் பள்ளிகளும், 4 மாவட்டங்களில் 4 விடுதிகளும் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவிஷ்ய வித்யாலயா (NSCBAV) திட்டத்தின் கீழ் இயங்கி வருகின்றன. இங்குள்ள மாணவ, மாணவியர்க்கும் மாதந்தோறும் ரூ.200/– ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் 1550 மாணவ, மாணவியர் பயனடைந்து வருகிறார்கள். 2024–25ஆம் ஆண்டில் இப்பள்ளிகளின் செயல்பாட்டிற்காக ரூ.12.21 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் மாணவர் சேர்க்கை அதிகரித்து நிலையான வளர்ச்சி இலக்கு 4.1.1–ன் குறிகாட்டியினை அதிகரிக்க உதவுகிறது.

### *3.3.6 போக்குவரத்து/ பாதுகாவலர் வசதி*

பள்ளியினை எளிதில் அணுக இயலாத பரவலான மக்கள் தொகை கொண்ட, தொலைதூர / அடர்ந்த காடு / மலைக் குடியிருப்புகள், போக்குவரத்து வசதி இல்லாத குடியிருப்புகள் மற்றும் நகர்ப்புறத்தில் இடவசதி இன்மையால் பள்ளி தொடங்க இயலாத குடியிருப்புகளில் உள்ள தொடக்கநிலை முதல் உயர்நிலை வரையில் பயிலும் மாணவர்கள் பாதுகாப்பாகப் பள்ளிக்குச் சென்று வர போக்குவரத்து / பாதுகாவலர் வசதி வழங்கப்படுகிறது. இத்திட்டமானது மாணவர்கள் இடைநிற்றலின்றி பள்ளி செல்வதற்கு உதவுகிறது.

இதன்மூலம் 2024–25ஆம் ஆண்டில் 29 மாவட்டங்களைச் சார்ந்த 1907 குடியிருப்புகளில் உள்ள 34,182 மாணவர்களுக்கு இவ்வசதி அளிக்கப்பட்டு வருகிறது. இதற்கென ரூ.19.64 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டது. போக்குவரத்து / பாதுகாவலர் வசதி, 4.1.7 நிலையான வளர்ச்சி இலக்கான மாணவர்களின் இடைநிற்றலைக் குறைப்பதற்கு முக்கிய பங்காற்றுகிறது.

### *3.3.7 இல்லம் தேடிக் கல்வி*

கோவிட் – 19 பெருந்தொற்றுக் காலத்தில் அரசுப் பள்ளிக் குழந்தைகளிடம் ஏற்பட்ட கற்றல் இடைவெளி மற்றும் கற்றல் இழப்புகளைச் சரி செய்திட தமிழ்நாடு அரசின் முன்னெடுப்பாக பள்ளிக் கல்வித் துறையால் "இல்லம் தேடிக் கல்வி" திட்டம் 2021ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 2024–25ஆம் கல்வியாண்டில் இல்லம் தேடிக் கல்வி மையங்கள் கல்வியில் பின் தங்கிய வட்டாரங்கள், மலைப் பகுதிகள், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புப் பகுதிகள், பின்தங்கிய சமூகத்தினர் பெரும்பான்மையாக வாழும் பகுதிகள், கவனம் செலுத்தப்பட வேண்டிய வட்டாரங்கள் மற்றும் இடங்கள் கண்டறியப்பட்டு 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு தன்னார்வலரும் எளிதாகக் கற்பிக்க ஏதுவாக, கையேடு, கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

### *3.3.8 பள்ளி மானியம்*

பள்ளி மானியம் என்பது அனைத்து அரசுப் பள்ளிகளிலும் கற்றல் சூழலை மேம்படுத்துவதை

நோக்கமாகக் கொண்ட வருடாந்திர நிதி ஒதுக்கீடு ஆகும். இந்த மானியம் பள்ளிக் கழிவறைகளைத் தூய்மையாகப் பராமரித்தல், இணைய வசதிகளை வழங்குதல், கற்றல் மற்றும் கற்பித்தல் உபகரணங்களை வாங்குதல், பள்ளிக் கட்டடங்களில் சிறு பழுதுகளைச் சரி செய்தல் உள்ளிட்ட பல்வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது. 2024–25ஆம் கல்வியாண்டில், மொத்தம் 37,471 அரசுப் பள்ளிகள் இந்த மானியத்தால் பயனடைந்துள்ளன.

### *3.3.9 உட்கட்டமைப்பு வசதிகள்*

ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி வாயிலாக தொடக்கப்பள்ளி முதல் மேல்நிலைப் பள்ளி வரை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த 2021–22 முதல் 2023–24 வரை ரூ.435.96 கோடிக்கு நிதி ஒப்புதல் அளிக்கப்பட்டு, 12,210 பணிகள் நடைபெற்றுள்ளன. 92% பள்ளிகளில் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகள் (சாய்வுதளங்கள் மற்றும் கைப்பிடிகள்) ஏற்படுத்தப்பட்டுள்ளன. வரும் கல்வியாண்டில், 100% பள்ளிகளிலும் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்.

### *3.3.10 பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம்*

தமிழகத்தின் கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் பங்காற்றிய பேராசிரியர் அன்பழகன் அவர்களின் பெயரில் பள்ளி வளர்ச்சித் திட்டமானது அரசுப் பள்ளிகளில் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் 2022-23 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து வகையான அரசுப்பள்ளிகளுக்கும் போதுமான கட்டமைப்பு, தரமான வகுப்பறை, ஆய்வகம், கழிப்பறை வசதி, சுற்றுச்சுவர் போன்ற வசதிகள் அனைத்தும் இத்திட்டத்தின் மூலம் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் மூலம் இதுவரை ரூ.3527.50 கோடி மதிப்பீட்டில் 8370 வகுப்பறைகள், 52 ஆய்வகங்கள், 184 யூனிட் கழிப்பறைகள், 752 மீட்டர் சுற்றுச்சுவர்கள், 5 மாணவர் விடுதிகள், 5 மாணவியர் விடுதிகள் ஆகியவை கட்டப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும் 4412 வகுப்பறைகள், 105 ஆய்வகங்கள், 323 கழிப்பறைகள், 2290 மீட்டர் சுற்றுச்சுவர் ஆகியவை கட்டப்பட்டு வருகின்றன. இந்த நிதியாண்டிலும் ரூ.1,000 கோடி மதிப்பீட்டில் பள்ளிக் கட்டமைப்பு

வசதிகள் மேற்கொள்ளப்படும் என நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### *3.3.11 உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள்*

தற்போதைய தொழில்நுட்ப உலகில், எதிர்காலத்திற்கு ஏற்ற வகையில் மாணவர்களைத் தயார்படுத்தும் பொருட்டு தொழில்நுட்ப உட்கட்டமைப்பை மேம்படுத்துவது மிக முக்கியமானது என்பதைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசின் எண்ணிய தொழில்நுட்ப (Digital Technology) விரிவாக்கம் செய்யும் நிகழ்வின் ஒரு முன்னெடுப்பாக 8,209 உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் ரூ.519.73 கோடியில் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் தற்போது பயன்பாட்டில் உள்ள உயர்தொழில்நுட்ப ஆய்வகங்களை நவீன தொழில்நுட்பத்தின் அடிப்படையில், மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கூடுதல் எண்ணிக்கையிலான கணினிகளுடன் மேம்படுத்தவும், அதேபோன்று ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளில் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்களை அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் 654 உயர்

தொழில்நுட்ப ஆய்வகங்கள் ரூ.41.86 கோடி செலவில் அமைக்கப்பட உள்ளன.

### *3.3.12 திறன்மிகு வகுப்பறைகள்*

பள்ளிகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்துவ-தற்கான தொலைநோக்குப் பார்வையின் கீழ், தமிழக அரசால், மாநிலம் முழுவதும் உள்ள 21,984 அரசுப் பள்ளிகளில் 22,931 திறன்மிகு வகுப்பறைகள் ரூ.455.32 கோடியில் நிறுவப்பட்டுள்ளன. இந்த வகுப்பறைகள் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கும், கற்றல் செயல்முறைகளை ஊக்குவிக்கவும், மாணவர்களை கற்றலில் ஈடுபடுத்தக்கூடியதாக மாற்றும் வகையிலும் அதிநவீன தொழில் நுட்பத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளன.

மேலும் 2024–25ஆம் கல்வியாண்டில் ரூ.33.25 கோடி மதிப்பீட்டில் அரசு உதவி பெறும் தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் 1,750 திறன் வகுப்பறைகள் அமைக்கப்பட உள்ளன.

### *3.3.13 நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி*

நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி என்ற திட்டம் தமிழ்நாட்டின் அரசுப் பள்ளிகளை மேம்படுத்தும் நோக்கில் கடந்த 2022 டிசம்பர் 19 அன்று தொடங்கப்பட்டு சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டம், பெருநிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள், சமூக சேவை அமைப்புகள், முன்னாள் மாணவர்கள் மற்றும் தனிநபர்களின் பங்களிப்புகளைக் கொண்டு அரசுப் பள்ளிகளில் சிறந்த கல்விச் சூழலை உருவாக்குகிறது.

இத்திட்டத்தின் கீழ் திரட்டப்படும் நிதி, அரசுப் பள்ளிகளின் கற்றல் சூழலை மேம்படுத்தி அனைவருக்கும் தரமான கல்வி எனும் நிலையான வளர்ச்சி இலக்கினை அடைய நேரடியாகப் பங்களிக்கிறது. உட்கட்டமைப்பு, டிஜிட்டல் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை மேம்படுத்த உதவுகிறது. SDG 6 (சுத்தமான நீர் மற்றும் சுகாதாரம்) இன் படி WASH (சுத்தமான நீர், சுகாதாரம் மற்றும் தூய்மை) தேவைகளை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்துவதால், மாணவர்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வைப் பேணிக்காக்கும் பணிகள் சமூக

அமைப்புகளின் பங்களிப்பின் வாயிலாக நிறைவேற்றப்படுகிறது. இத்திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து, இதுவரை மொத்தம் 633 கழிப்பறைகள் புதிதாகக் கட்டப்பட்டுள்ளதுடன், 467 கழிப்பறைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

2024–25ஆம் ஆண்டு வரை நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி திட்டத்தின் கீழ் ரூ.658.67 கோடி அளவிற்கு நிதியாகவும், பொருட்களாகவும், களப்பணி வாயிலாகவும் திரட்டப்பட்டுள்ளது. நிதியாகப் பெற்ற நன்கொடைகள் மூலம் 1,512 அரசுப் பள்ளிகளும், பொருட்களாகப் பெறப்பட்ட நன்கொடைகள் மூலம் 4,983 அரசுப் பள்ளிகளும், களப்பணிகளைச் செயல்படுத்தியதன் வாயிலாக 30,133 அரசுப் பள்ளிகளும் பயனடைந்துள்ளன.

### *3.3.14 உயர்கல்வி வழிகாட்டித் திட்டம்*

அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலக்கூடிய 10ஆம் வகுப்பு மாணவர்கள் மேல்நிலைக் கல்வியைத் தொடர்வதையும், 12ஆம் வகுப்பு மாணவர்கள் உயர்கல்வியைத் தொடரவும், நிலையான வளர்ச்சி இலக்குகளின் (SDG) 4.3 கீழ் குறிப்பிட்டுள்ள தொழில்நுட்பக்கல்வி, தொழிற்கல்வி

மற்றும் உயர்கல்வியில் சேர்வதற்கான சமமான வாய்ப்புகளை வழங்குவதற்காகவும் உயர்கல்வி வழிகாட்டித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் 12 ஆம் வகுப்பு முடித்த அரசுப்பள்ளி மாணவர்களின் உயர்கல்வி சேர்க்கை 40–45 விழுக்காடாக இருந்தது. 2024–25ஆம் கல்வியாண்டில், உயர்கல்வி வழிகாட்டித் திட்டத்திற்கு ரூ.25.02 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தின் செயல்பாடுகளாக, அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும் உயர்கல்வி வழிகாட்டிக் குழுக்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. வட்டார அளவிலான உயர்கல்வி வழிகாட்டி மையங்கள் வழியாக மாணவர்கள் போட்டித்தேர்வுகளுக்கு விண்ணப்பிக்கவும், அவற்றை எதிர்கொள்ளவும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. நான் முதல்வன் இணையதளத்தில் மாணவர்களுக்குத் தேவையான மின்உள்ளடக்கம், காணொலிகள் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட அனைத்து நடவடிக்கைகளின் வாயிலாக, 2023–24ஆம் கல்வியாண்டில் உயர்கல்வியில் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை 47 விழுக்காட்டிலிருந்து 74 விழுக்காடாக

உயர்ந்துள்ளது. இதன் மூலம் மொத்த சேர்க்கை விகிதத்தில் (GER) குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எட்டியுள்ளது.

வரும் ஆண்டுகளில் GER 100% என்ற இலக்கை அடைவதற்கு ஏதுவாகத் தேவையான அணுகலை மேம்படுத்துதல், விழிப்புணர்வை அதிகரித்தல் மற்றும் தேவையான உதவிகளை வழங்குவதில் இத்திட்டம் முக்கிய கவனம் செலுத்தி வருகிறது.

### *3.3.15 பள்ளி செல்லாக் குழந்தைகளுக்கான சிறப்புப்பயிற்சி*

ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வியானது, பள்ளி செல்லாக் குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்ப்பதற்கு விரிவான திட்டம் தீட்டிச் செயல்படுத்துவதுடன் சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டோர் மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்தோரைக் கல்வி வட்டத்திற்குள் கொண்டு வருவதற்கும் வழிசெய்கிறது. இதன்மூலம் பள்ளி செல்லாக் குழந்தைகளின் விழுக்காடு 2023–24இல் தொடக்கக் கல்வியில் 0.90%லிருந்து 0.13% ஆகவும், உயர்தொடக்க நிலையில் 1.55%லிருந்து 0.17% ஆகவும் குறைந்துள்ளது. இதற்கென 2024–25இல் ரூ.9.82

கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. நிலையான வளர்ச்சி இலக்கு 4.1.7ன்படி இம்முன்னெடுப்பு பள்ளி செல்லாக் குழந்தைகளின் எண்ணிக்கையைக் குறைக்க வழிகோலுகிறது.

## 3.4 நலத்திட்டங்கள்

அரசுப் பள்ளிகளில் பயின்றுவரும் மாணவர்கள் சமூக, பொருளாதார காரணங்களால் தடையேதுமின்றி பள்ளிக் கல்வியை நிறைவு செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் அரசு பின்வரும் நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

| வ. எண் | நலத் திட்டத்தின் பெயர் | வகுப்பு | பயனாளிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | பாடநூல்கள் | 1–12 | 70.08 |
| 2. | நோட்டுப் புத்தகம் | 1–10 | 56.65 |
| 3. | புத்தகப்பை | 1–12 | 66.47 |
| 4. | காலணிகள் | 1–5 | 28.81 |
| 5 | கால் ஏந்திகள் | 6–10 | 55.25 |
| 6 | காலுறைகள் | 6–10 | 79.21 |
| 7. | புவியியல் வரைபடம் | 6 மற்றும் 7 முதல் 10 வரை புதிதாகச் சேரும் மாணவர்கள் | 8.0 |
| 8. | கிரையான் | 1–2 | 8.15 |
| 9. | வண்ணப் பென்சில்கள் | 3–5 | 14.77 |

| | | | |
|---|---|---|---|
| 10. | கணித உபகரணப் பெட்டி | 6 & 9 (7, 8 புதிதாகச் சேரும் மாணவர்கள்) | 12.38 |
| 11. | சிறப்பு ஊக்கத் தொகை | 10–12 | 15.08 (2023–24) |
| 12. | சீருடை | 1–8 | 40.53 |
| 13. | மிதிவண்டி | 11 | 5.36 |
| 14. | கம்பளிச் சட்டை உறை காலணிகள், மழையாடைகள், காலுறைகள் | 1–8 (மலைப்பகுதி பள்ளிகளில் உள்ள மாணவர்கள்) | 1.99 |
| 15. | புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் | 1–10 | 40.52 |
| 16. | முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் | 1–5 | 20.67 |
| 17. | பேருந்துப் பயண அட்டை | 1–12 | 18.99 |
| 18. | வருவாய் ஈட்டும் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கான நிதியுதவித் திட்டம் | 1–12 | 2535 (மாணவர்கள்) |
| 19 | மாணவர்களுக்கு விபத்தினால் ஏற்படும் பாதிப்புகளுக்கான நிதியுதவித் திட்டம் | 1–12 | 28 (மாணவர்கள்) |

## 3.5 முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

மாணவர்களின் வருகையை ஊக்குவிக்கவும், அவர்களின் உடல்நலத்தைக் கருத்தில் கொண்டும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை உணவு வழங்கும் முன்னோடித் திட்டம் அரசுப் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு சமூக நலத்துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2024–25ஆம் கல்வியாண்டில் ஊரகப் பகுதிகளில் உள்ள அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

## 3.6 விளையாட்டு மற்றும் கலைத் திறன் போட்டிகள்

### *3.6.1 மாநில மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள்*

எதிர்கால தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டு வீரர்களை உருவாக்கும் வகையில் குழந்தைகளின் விளையாட்டுத் திறன்களைக் கண்டறிந்து பள்ளி, மண்டலம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படும் போட்டிகளில் சிறப்பாகச் செயல்படும் மாணவர்கள், இந்திய பள்ளி விளையாட்டுக் கூட்டமைப்பு நடத்தும் தேசிய

அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கின்றனர். இதுவரை நடைபெற்றுள்ள 21 விளையாட்டுகளில் 33 தங்கம், 51 வெள்ளி, 84 வெண்கலம் என மொத்தம் 168 பதக்கங்களை வென்றுள்ளனர். தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் இதுவரை 2293 மாணவர்கள் பங்கேற்றுள்ளனர். 2024-25ஆம் ஆண்டில் இந்த விளையாட்டுப் போட்டிகளை நடத்த ரூ.12.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### *3.6.2 சதுரங்க விளையாட்டு*

சர்வதேசத் தரவரிசை உட்பட பல்வேறு நிலைகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் சதுரங்கப் போட்டிகளில் சிறந்து விளங்குகின்றனர். குழந்தைகளின் திறமையை வளர்க்கும் வண்ணம் அனைத்துப் பள்ளிகளிலும் சதுரங்க விளையாட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 2024-25ஆம் ஆண்டில் 7 வயது முதல் 17 வயது வரையிலான பல்வேறு பிரிவுகளுக்கு பள்ளி, வட்டாரம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் சதுரங்கப் போட்டிகள் நடத்தப்பட்டன. சதுரங்கப் போட்டிகளில் 6,01,781 குழந்தைகள் பங்கேற்றனர்.

### *3.6.3 சிறார் திரைப்பட விழா*

அரசுப் பள்ளிகளில் 6 முதல் 9 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்காக, தேர்ந்தெடுக்கப்பட்ட திரைப்படங்கள் திரையிடப்படுகின்றன. இதன் மூலம் விழிப்புணர்வை உருவாக்குதல், வாழ்வியல் மதிப்புகளை வலுவூட்டல், கதை விமர்சனம், தனிநபர் நடிப்பு, குறும்படம் தயாரித்தல் மற்றும் துறை வல்லுநர்களுடன் தொடர்பு கொள்வதற்கான வாய்ப்புகள் போன்றவற்றில் ஆர்வம் மற்றும் திறன்களை வளர்ப்பதில் சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது.

### *3.6.4 வானவில் மன்றம்*

வானவில் மன்றம் (நடமாடும் அறிவியல் ஆய்வகம்) முன்னோடித் திட்டமானது அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை ரூ.11.69 கோடி செலவில் செயல்படுத்தப்படுகிறது. மாணவர்களின் சுய ஆய்வு மற்றும் கற்றல் திறன்களை மேம்படுத்த இத்திட்டம் பயனுள்ளதாக இருக்கும். 710 கருத்தாளர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்குப் பயிற்சிகளும் அளிக்கப்பட்டுள்ளது. இவர்கள் அறிவியல் மற்றும் கணிதக் கருத்துகளைச் சோதனைகள் மற்றும்

மாதிரிகள் மூலம் பள்ளி மாணவர்களுக்குச் செய்து காட்டுகின்றனர். இத்திட்டத்தால் மொத்தம் 33.50 இலட்சம் குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

### *3.6.5 மாணவர் மன்றச் செயல்பாடுகள்*

குழந்தைகளின் உள்ளார்ந்த மற்றும் ஆற்றல் மிகு திறன்களை வளர்க்கவும், குழு செயல்திறனை வளர்க்கவும், இலக்கியம், கலை, நாடகம், அறிவியல், கணிதம், பொது அறிவு, சுகாதாரம், நுகர்வோர் விழிப்புணர்வு, வாக்காளர் விழிப்புணர்வு மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான குழு நடவடிக்கைகள் போன்றவை பள்ளிகளில் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. பள்ளி, ஒன்றியம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் போட்டிகள் நடத்தப்படுகின்றன. மாநில அளவிலான போட்டிகளில் சிறந்து விளங்கும் மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, சிறந்த மாணவர்கள் கல்விச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். 2024 உலக சுனாமி விழிப்புணர்வு நாளை முன்னிட்டு ஜப்பானில் உள்ள குமாமோட்டோ நகரில் 2024 அக்டோபர் 19 முதல் 25 வரை நடைபெற்ற உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கான சுனாமி உச்சி மாநாட்டில் ஒரு மாணவர் மற்றும் ஒரு ஆசிரியர் கலந்துகொண்டனர்.

### *3.6.6 கோடைக் கொண்டாட்டம்*

தமிழகத்தின் மலைப் பகுதிகளில் கோடை விடுமுறையில் கோடைக் கொண்டாட்டம் சிறப்புப் பயிற்சி முகாம் நடத்தப்படுகிறது. 2024–25ஆம் ஆண்டில், ஏற்காடு, கொல்லிமலை, கொடைக்கானல் மற்றும் குற்றாலம் ஆகிய 4 இடங்களில் முகாம்கள் நடத்தப்பட்டன. இந்த முகாம்களால் ரூ.34.73 இலட்சம் செலவில் 663 குழந்தைகள் பயனடைந்தனர்.

### *3.6.7 கலைத்திருவிழா*

பள்ளிக் கல்வித் துறையால் 2022–23 முதல் ஒவ்வோராண்டும் நடத்தப்படும் கலைத்திருவிழா, நிலையான வளர்ச்சி இலக்கின் (SDGs) நான்காவது இலக்கான தரமான கல்வியை கலைகள் மூலம் ஊக்குவிப்பதனை உறுதி செய்கிறது. இக்கலை நிகழ்ச்சிகள் தன்னம்பிக்கையை வளர்ப்பதன் மூலமும், குழுப்பணியை ஊக்குவிப்பதன் மூலமும், உள்ளடக்கிய மதிப்புகளை வளர்ப்பதன் மூலமும் மாணவர்களின் முழுமையான வளர்ச்சியை வடிவமைப்பதில் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கிறது. பல்வேறு கலாச்சார மரபுகளைக் கொண்டாடுவதன் மூலம், இந்நிகழ்வு நிலையான வளர்ச்சி இலக்கின் (SDGs) பத்தாவது

இலக்கான ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கவும் உதவுகிறது. ஒவ்வொரு மாணவருக்கும், அவரவரின் தனித் திறமைகளை வெளிக்கொணரவும் வாய்ப்பளிக்கிறது.

2024-25 ஆம் ஆண்டில், 5 பிரிவுகளில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் பள்ளி, வட்டாரம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் பள்ளி அளவில் மட்டும் 46.72 இலட்சம் மாணவர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர். இப்போட்டிகள் அனைத்தும் ரூபாய் 5.35 கோடி மதிப்பீட்டில் நடத்தப்பட்டன. கலையரசன் மற்றும் கலையரசி விருதுகள் ஐந்து பிரிவுகளில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்குத் தனித்தனியாக வழங்கப்பட்டன.

### 3.7 கல்விச் சுற்றுலா

கலைத்திருவிழா, இலக்கிய மன்றம், வினாடி வினா மன்றம், வானவில் மன்றம், குழந்தைகள் திரைப்பட விழா நடவடிக்கைகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் எனப் பல்வேறு பிரிவுகளில் சிறந்து விளங்கிய மாணவர்கள் ஐக்கிய அரபு அமீரகம்,

சிங்கப்பூர், மலேசியா, தென்கொரியா, ஜப்பான், ஹாங்காங் ஆகிய நாடுகளுக்குக் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டனர்.

### 3.8 மாபெரும் வாசிப்பு இயக்கம்

அனைத்து அரசுப் பள்ளிகளிலும் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களிடம் வாசிப்புப் பழக்கத்தை அதிகரிக்க, குழந்தைகள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் எளிய மொழியில் 16 பக்க புத்தகங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை **நுழை**, **நட**, **ஓடு**, **பற** என நான்கு வாசிப்பு நிலைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் மூலம் 123 புத்தகங்கள் 2.22 கோடி பிரதிகள் அச்சடிக்கப்பட்டு 37,594 அரசுப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த மாபெரும் வாசிப்பு இயக்கத்தின் வாயிலாக 44.50 இலட்சம் மாணவ, மாணவியர் பயனடைந்துள்ளனர். 2023–24ஆம் ஆண்டில், ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 3.9 தமிழ் மொழி கற்போம்

பிற மாநிலத் தொழிலாளர்களின் குழந்தைகள், தங்களின் தாய்மொழியுடன் தமிழில் பேசவும், எழுதவும் "தமிழ்மொழி கற்போம்" என்ற திட்டம் 2023 முதல் செயல்படுத்தபட்டு வருகிறது. இக்குழந்தைகள் தமிழக அரசுப்பள்ளிகளில் சேர்ந்து தமிழ் மொழியை ஒரு பாடமாகவும், பிறபாடங்கள் அனைத்தையும் தங்கள் தாய் மொழியிலும் கற்பதற்கு ஏதுவாக சிறப்புப் பயிற்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

2024–25 ஆம் ஆண்டில் 15 மாவட்டங்களில் 67 சிறப்புப் பயிற்சி மையங்கள் "தமிழ் மொழி கற்போம்" திட்டத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களில் 74 கல்வித் தன்னார்வலர்கள் 1545 புலம்பெயர்ந்த குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கின்றனர். இத்திட்டத்திற்கென ரூ.49.95 இலட்சம் அனுமதிக்கப்பட்டது.

### 3.10 பள்ளி மேலாண்மைக் குழு

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009ன் படி அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், 2022ஆம் ஆண்டில் பள்ளி

மேலாண்மைக் குழு முதன்முறையாக அமைக்கப்பட்டது. இக்குழு பள்ளிக்கு வரும் ஒவ்வொரு மாணவரும் உள்ளடக்கிய, சமமான கற்றலை ஊக்குவிக்கும் வகையில் தரமான கல்வி பெறுவதை உறுதி செய்கிறது.

கல்விக்கு உகந்த சூழலை உருவாக்குவதில் கவனம் செலுத்துவதால், பள்ளியின் பல்வேறு தேவைகளை அடையாளம் காணவும், திட்டமிடவும், தீர்மானங்களை நிறைவேற்றவும் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டங்கள் நடத்தப்பட்டுகின்றன. செப்டம்பர் 2022 முதல் டிசம்பர் 2024 வரை, 2,01,224 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, அவற்றுள் 1,37,482 தீர்மானங்களுக்குத் தீர்வுகள் காணப்பட்டுள்ளன.

2022ஆம் ஆண்டில் மறுசீரமைக்கப்பட்ட பள்ளி மேலாண்மைக் குழுவின் (SMC) பதவிக்காலம் (2 ஆண்டுகள்) நிறைவடைந்து, புதுப்பிக்கப்பட்ட 24 உறுப்பினர்களைக் கொண்ட பள்ளி மேலாண்மைக் குழு ஆகஸ்ட் 2024இல் மறுகட்டமைப்பு செய்யப்பட்டு சுமார் 8.4 இலட்சம் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு EMIS தளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளனர். மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்ட அளவிலான கண்காணிப்புக்

குழு(DLMC), மாவட்டக் கல்வி ஆய்வு(DER) செயல்முறை மற்றும் மாநில அளவிலான கண்காணிப்புக் குழு(SLMC) மூலம் பள்ளி மேலாண்மைக் குழுவின் நிறுவனமயமாக்கல் மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு 2024–25ஆம் ஆண்டில் ரூ.16.88 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டது.

## 3.11 சேவைகள்

### *3.11.1 நாட்டு நலப்பணித் திட்டம்*

11 மற்றும் 12–ஆம் வகுப்புகளில் படிக்கும் மாணவர்களிடையே தன்னார்வத்தொண்டு மற்றும் வாழ்க்கைத் திறன்களை வளர்க்கும் நோக்கத்துடன் மேல்நிலைப் பள்ளிகளில் 1953 நாட்டு நலப்பணித் திட்ட அலகுகள் செயல்படுகின்றன. இதில் 97,650 மாணவர்கள் தன்னார்வலர்களாகச் சேர்ந்துள்ளனர். சுகாதார முகாம், தூய்மையான சுற்றுச்சூழல் நடவடிக்கைகள், திடக்கழிவு மேலாண்மை, சரிவிகித உணவு, உயர்கல்வி வழிகாட்டி நிகழ்ச்சி, பெண்கள் மற்றும் பெண்கள் உரிமை குறித்த விழிப்புணர்வு, முதியோர் இல்லங்கள், இடைநிற்றல் தடுப்பு, ஒருமுறை பயன்படுத்தும் நெகிழி குறித்த நுகர்வோர் விழிப்புணர்வு

மற்றும் பிற நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் தங்கள் தன்னார்வ சேவையைச் செய்து வருகின்றனர்.

### *3.11.2 சாரண, சாரணியர் இயக்கம்*

பள்ளி மாணவர்களிடையே உடல் மற்றும் மன வளர்ச்சி, சமூகப் பொறுப்புணர்வை மேம்படுத்த சாரண சாரணியர் இயக்கம் உதவுகிறது. 3,22,218 மாணவர்களும், 12,750 ஆசிரியர்களும் பள்ளி அளவில் சாரண சாரணிய இயக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். 2024–25ஆம் ஆண்டில், பன்னாட்டு மாணவர்கள் பங்கேற்ற தேசிய ஜம்போரி–2025 திருச்சி மாவட்டத்தில் உள்ள மணப்பாறையில் ஜனவரி 28 முதல் பிப்ரவரி 3ஆம் தேதி வரை நடைபெற்றது. இது முன்னாள் முதல்வர், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் பாரத சாரண, சாரணியர் இயக்கத்தின் 75வது ஆண்டு வைர விழா சிறப்பு நிகழ்வாகும். இந்த விழாவை நடத்துவதற்கு அரசால் ரூ.15 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

குழந்தைகளிடையே நட்பு, கலாசாரப் பரிமாற்றம், தலைமைத்துவம் மற்றும் சமூக சேவை ஆகியவற்றை

மேம்படுத்தவும் சாரணர் ஊக்குவிப்பினைக் கொண்டாடவும் இந்த நிகழ்ச்சி ஒரு வாய்ப்பாக அமைந்தது. இந்த நிகழ்வில் மொத்தம் 20000 பங்கேற்பாளர்கள் கலந்துகொண்டனர். நேபாளம், இலங்கை, மலேசியா, சவுதி அரேபியா போன்ற 4 சர்வதேச நாடுகளைச் சேர்ந்த 90 சாரண சாரணியர் ஜம்போரியில் பங்கேற்றனர். மேலும் 26 மாநிலங்களைச் சேர்ந்த அலகுகள் 7 நாள் முகாமில் பங்கேற்றன. ஜம்போரி வெற்றிகரமாக நடத்தப்பட்டதை அங்கீகரிக்கும் வகையில் மாண்புமிகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்களால் வழங்கப்படும் இயக்கத்தின் மிக உயர்ந்த தேசிய விருதான **வெள்ளி யானை விருது** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு, அறிவிக்கப்பட்டுள்ளது.

### *3.11.3 இளஞ் செஞ்சிலுவைச் சங்கம்*

தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் 12,104 இளஞ் செஞ்சிலுவைச் சங்க அலகுகள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு அலகுக்கும் ஓர் ஆசிரிய ஆலோசகர் தலைமையில் மொத்தம் 4,73,112 மாணவர் தன்னார்வலர்கள் முதலுதவி, பேரிடர் மேலாண்மை, சாலைப் பாதுகாப்பு, தீ விபத்து தடுப்பு, போதைப்பொருள்

பற்றிய விழிப்புணர்வு போன்றவற்றில் பயிற்சி பெற்று பல்வேறு செயல்பாடுகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

## 3.12 சிறந்த பள்ளிக்கான பேராசிரியர் அன்பழகன் விருது

புதுமையான கற்றல் கற்பித்தல் முறைகள், ஆசிரியர் திறன் மேம்பாடு, தலைமைத்துவம் மற்றும் மாணவர் மேம்பாடு போன்றவற்றில் பன்முக வளர்ச்சியை வெளிப்படுத்தும் சிறந்த அரசுப் பள்ளிகளுக்கு 2023–2024ஆம் கல்வியாண்டில் பேராசிரியர் அன்பழகன் பெயரில் விருது அறிமுகப்படுத்தப்பட்டு, 16 தொடக்கநிலை, 22 நடுநிலை, 12 உயர்நிலை, 26 மேல்நிலை என மொத்தம் 76 பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டன. 2024–25ஆம் ஆண்டிற்கான சிறந்த பள்ளிகளைத் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

## 3.13 மகிழ் முற்றம் (மாற்றத்திற்கான பயணம்)

பள்ளி மாணவர்களிடையே தலைமைப் பண்பு மற்றும் குழு உணர்வை வளர்ப்பதற்கான மகிழ் முற்றம் திட்டம் 2024–25ஆம் ஆண்டு முதல் 37,470 அரசுப் பள்ளிகளில் செயல்படுத்தப்படுகிறது. இம்முயற்சியில்

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் மற்றும் பாலை ஆகிய ஐந்து குழுக்களில் ஏதேனும் ஒன்றில் குழந்தைகள் குழுவாக உள்ளனர், குழந்தைகளின் வருகை, கல்வி, குழுச் செயல்பாடுகள் மற்றும் கலைத்திருவிழாவில் பங்கேற்பு ஆகியவற்றின் அடிப்படையில் குழந்தைகளின் செயல்திறன் மதிப்பீடு செய்யப்பட்டு குழுக்கள் தரவரிசைப்படுத்தப்படுகின்றன.

### 3.14 ஆசிரியர் நலன் சார்ந்த திட்டங்கள்

#### *3.14.1 இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்குக் கைக்கணினி வழங்கும் திட்டம்*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர் நலனுக்காக அயராது பாடுபட்டுவரும் ஆசிரியர் சமூகத்தைச் சிறப்பிக்கும் வகையிலும் மாறிவரும் கற்றல் கற்பித்தல் முறைகளுக்கேற்ப ஆசிரியர்கள் தங்கள் தனித்திறனை மேலும் மேம்படுத்திக் கொள்வதற்கும் இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்குக் கைக்கணினி வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முதற்கட்டமாக ரூ.81கோடி மதிப்பீட்டில் 79,723 ஆசிரியர்களுக்கு கைக்கணினிகள் வழங்கப்பட்டது.

இரண்டாம் கட்டமாக மேலும் 54,259 கைக்கணினிகள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படும்.

### *3.14.2 கனவு ஆசிரியர் விருது*

ஆசிரியர்களின் கற்பித்தல் உத்திகள், பாடப்பொருள்சார் அறிவு, மாணவர் மேம்பாட்டிற்கான செயல்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் மூன்று கட்டத் தேர்வுகளின் மூலம் கனவு ஆசிரியர் விருதுக்குத் தகுதியான ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். 2023–24ம் ஆண்டில் 8096 ஆசிரியர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 380 ஆசிரியர்களுக்கு விருதும் சான்றிதழும் வழங்கப்பட்டதுடன், இத்தேர்வுகளில் 90 விழுக்காட்டிற்கும் அதிகமான மதிப்பெண் பெற்ற 55 ஆசிரியர்கள் கல்வி, கலை, தொழில்நுட்பம், பாரம்பரியம், கலாச்சாரம் ஆகியவற்றில் சிறந்து விளங்கும் பிரான்சு நாட்டிற்குக் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டனர். மேலும், இவ்விருது பெற்ற இதர 325 ஆசிரியர்கள் இந்திய அளவில் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டனர்.

### *3.14.3 கருணை அடிப்படையிலான நியமனம்*

தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையின்கீழ் உள்ள அரசுப் பள்ளிகளில் / அலுவலகங்களில் பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான ஆசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர் குடும்பத்தின் வறுமை நிலையினைப் போக்க அவர்களது வாரிசுதாரர்களுக்கு தகுதி மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் 1972ஆம் ஆண்டு முதல் கருணை அடிப்படையில் பணி வாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 2021 முதல் 2024 வரை 650 நபர்களுக்கு இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

### *3.14.4 அறிஞர் அண்ணா தலைமைத்துவ விருது*

பள்ளிக் கல்வி, விளையாட்டு, மாணவர் மேம்பாடு, பள்ளிக் கட்டமைப்பு, பள்ளி மேலாண்மைக் குழுவின் செயல்பாடு, இல்லம் தேடிக் கல்வி உள்ளிட்ட அரசின் திட்டங்கள் அனைத்தையும் சிறப்பாகச் செயல்படுத்தும் 100 பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு 2023–24ஆம் ஆண்டுமுதல் ஆண்டுதோறும் அறிஞர் அண்ணா தலைமைத்துவ விருதும் பாராட்டுக் கேடயமும் வழங்கப்படுகிறது. இவ்விருது பெறும்

தலைமையாசிரியர்களை ஊக்கப்படுத்தும் வகையில் அவர்கள் பணியாற்றும் பள்ளி மேம்பாட்டிற்காக தலா ரூ.10 இலட்சம் வீதம் ரூ.10 கோடி ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

### 3.15 நிதி ஒதுக்கீடு

அரசால் இவ்வியக்ககங்களுக்கு 2025–26ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் ரூ.44,748.47 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 4. தனியார் பள்ளிகள் இயக்ககம்

## 4.1 முன்னுரை

தனியார் பள்ளிகள் இயக்ககத்தின் கீழ் உள்ள 12,970 தனியார் பள்ளிகளில் 63.42 இலட்சம் மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். மாநில அளவில் தனியார் பள்ளிகள் இயக்குநரகம் வாயிலாகவும், மாவட்ட அளவில் மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்) வாயிலாகவும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

## 4.2 தொலைநோக்கு

- ❖ தனியார் பள்ளிகளில் பாதுகாப்பான மற்றும் அனைத்து வசதிகளுடன் கூடிய மாணவர்களுக்கான உள்கட்டமைப்பு வசதிகள்.
- ❖ குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்–2009 மற்றும் விதிகள்–2011 ஆகியவற்றை சிறப்பாகச் செயல்படுத்துதல்.

## 4.3 குறிக்கோள்கள்

- ❖ பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை இணையதள வசதி (EMIS) மூலம் உறுதி செய்தல்.
- ❖ அரசின் கொள்கைகள், விதிகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளை அமல்படுத்துதல்.

- ❖ குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009–ஐ நடைமுறைப்படுத்துவதில் மாநில முகவாண்மையாகச் செயல்படுதல்.

## 4.4 முக்கிய முன்னெடுப்புகள் மற்றும் சாதனைகள்

### *4.4.1 கல்வி மற்றும் விளையாட்டுப் போட்டிகள்*

சர்வதேச, தேசிய மற்றும் மாநில அளவில் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்ற 2,641 மாணவ / மாணவியர்களுக்கும், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 10ஆம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வில் 100% தேர்ச்சி பெற்ற 1,622 பள்ளிகள் மற்றும் 12ஆம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வில் 100% தேர்ச்சி பெற்ற 2,120 பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

### *4.4.2 இலவச கட்டாயக் கல்வி உரிமைச்சட்டம் 2009–இன்படி குழந்தைகள் சேர்க்கை*

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச்சட்டம்–2009 தமிழகத்தில் சீரிய முறையில் நடைமுறைப்டுத்தப்பட்டு வருகிறது. 2023–2024ஆம் கல்வியாண்டு வரை இத்திட்டத்தின் கீழ் எல்.கே.ஜி முதல் 8ஆம் வகுப்பு வரை 4,37,683

குழந்தைகள் கல்விபயின்று வருகின்றனர். 2024–25ஆம் கல்வியாண்டில் எல்.கே.ஜி வகுப்பில் 70,452 குழந்தைகள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

### *4.4.3 சுயநிதிப் பள்ளிகளில் தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கான விலையில்லா நலத் திட்டங்கள்*

தனியார் சுயநிதிப்பள்ளிகளில் 1 முதல் 10ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கும் அரசின் விலையில்லா நலத்திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் 2024–25ஆம் கல்வியாண்டில் ரூ.3.33 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தமிழ் வழியில் பயிலும் 49,498 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

### *4.4.4 போக்சோ சட்டம் குறித்து விழிப்புணர்வு*

அனைத்து மாவட்டங்களிலும் உள்ள தனியார் பள்ளிகளில் பணிபுரியும் 87,609 ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்கள், சமூக நலத்துறை மற்றும் காவல்துறை அலுவலர்களைக் கொண்டு மாணவர்களின் பாதுகாப்பு நலன் குறித்தும் போக்சோ சட்டம் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### *4.4.5 பள்ளிகளுக்கான அனுமதி ஆணை வழங்குதல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்துதல்*

தனியார் பள்ளிகளுக்கான ஒழுங்குமுறைப் படுத்துதல் இணைய முகப்பு (Regulatory Compliance Portal) மற்றும் அலுவலர்களுக்கான ஆய்வுச் செயலி (Inspection App) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 31.12.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இதன் மூலம் புதிய சுயநிதி மற்றும் தனியார் பள்ளிகள் துவக்க அனுமதி, தரம் உயர்த்துதல், தொடர் அங்கீகாரம் வழங்குதல், கூடுதல் பிரிவுகள் தொடங்குதல் போன்ற பல்வேறு சேவைகளையும் இணைய வழியாக மேற்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தனியார் பள்ளிகள்) ஆய்வுச் செயலி வாயிலாக பள்ளிகளை ஆய்வு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஒளிவுமறைவற்ற முறையில் வெளிப்படையாகவும், விரைவாகவும், பள்ளிகளுக்குத் தேவையான ஆணைகள் இணைய வழியாக வழங்கப்பட்டு வருகின்றன.

### *4.4.6 தமிழ்நாடு தமிழ் கற்கும் சட்டம்–2006 நடைமுறைப்படுத்துதல்*

தமிழ்நாடு தமிழ் கற்கும் சட்டம் 2006–இன்படி 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் அனைவரும் தமிழ்மொழியைக் கட்டாயப் பாடமாகப் பயில வேண்டும். 2006–2007 முதல் செயல்படுத்தப்பட்டு வரும் இச்சட்டம், 2014–2015 முதல் பிறவாரியங்களில் இணைப்புப் பெற்ற பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக CBSE மற்றும் பிற வாரியப் பள்ளிகளில் பணிபுரியும் சுமார் 3,565 தமிழ் ஆசிரியர்களுக்கு அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் சிறப்பாகப் பணிபுரியும் தமிழ் ஆசிரியர்களைப் பாட வல்லுநராகக் கொண்டு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## 4.5 நிதி ஒதுக்கீடு

2025–26ஆம் ஆண்டிற்கு இவ்வியக்கத்திற்கு ரூ.677.61 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 5. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

## 5.1. அறிமுகம்

பள்ளிக்கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கும், கற்பித்தல் தரத்தை மேம்படுத்துவதற்கும் உரிய செயல்பாடுகளை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. தொடர்ச்சியான பயிற்சிகள், பணிமனைகள் மற்றும் ஆராய்ச்சிச் செயல்பாடுகள் மூலம் கல்வி சார்ந்த புதுமையான கருத்துகளை உடனுக்குடன் ஆசிரியர்கள் தெரிந்து பின்பற்றுவதை இந்நிறுவனம் உறுதிசெய்கிறது.

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களின் (DIETs) உதவியுடன் செய்துபார்த்துப் பயன்படுத்தும் ஆய்வக அணுகுமுறை பின்பற்றப்படுகிறது. மேலும் இந்நிறுவனம், கலைத்திட்டம், கற்பித்தல் முறைகள் மற்றும் மதிப்பீட்டு உத்திகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இதன்மூலம், மாற்றம் ஏற்படுத்தக்கூடிய, பொறுப்புணர்வுடன் கூடிய கல்விமுறையை உருவாக்க உறுதிபூண்டுள்ளது.

## 5.2 தொலைநோக்கு

- புதுமையான கற்பித்தல் முறைகள் வாயிலாக மாணவர்களின் கற்றல் விளைவுகளை மேம்படுத்துதல்.
- மின்னுரு கற்றலுடன் நவீன மதிப்பீட்டு உத்திகளை ஒருங்கிணைப்பதன் வாயிலாக கூர்சிந்தனைத் திறனை மேம்படுத்துதல்.
- மின்னியல் காலகட்டப் போட்டிச் சவால்களை எதிர்கொள்ள மாணவர்களைத் தயார்படுத்துதல்.

## 5.3. நோக்கங்கள்

- தொழில்நுட்ப மற்றும் சமூக முன்னேற்றங்களை ஒட்டி கலைத்திட்டம், பாடத்திட்டம் மற்றும் பாடநூல்களை உருவாக்குதல்.
- கற்றல் துணை உபகரணங்களுடன் மின்னுரு கருவிகளை ஒருங்கிணைத்து அளித்தல்.
- புதுமையான கற்பித்தல் உத்திகளுடன் இணைத்து வகுப்பறைச் செயல்பாடுகளைச் செம்மைப்படுத்த ஆசிரியர்களுக்குத் தரமான பணிமுன் பயிற்சி மற்றும் பணியிடைப் பயிற்சிகளை வழங்குதல்.

- பள்ளி நிருவாகிகளின் தலைமைத்துவம் மற்றும் மேலாண்மைத் திறன்களை வலுப்படுத்துதல்.
- ஆராய்ச்சிச் செயல்பாடுகளின் வாயிலாகக் கற்பித்தல் முறைகளை மேம்படுத்துதல்.
- மாணவர்களின் செயல் திறன்களை கண்காணித்து மதிப்பீடு செய்வதன் வாயிலாகப் பயிற்று முறைகளில் மாற்றங்களைச் செய்தல்.

## 5.4 திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள்

### *5.4.1 ஆசிரியர் பணித்திறன் மேம்பாட்டுத் திட்டம் (TPD)*

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், ஆசிரியர்களின் பயிற்சித் தேவைகளைக் கண்டறிந்து கட்டமைக்கப்பட்ட மேம்பாட்டுத் திட்டங்களை ஒழுங்கமைப்பதன் மூலம் அவர்களின் பணித் திறன்களை மேம்படுத்துவதில் முக்கியப் பங்காற்றுகிறது. 2024–25ஆம் கல்வி ஆண்டில், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், இன்றியமையாத சிறப்புப் பயிற்சித் திட்டங்களை நடத்தியுள்ளது.

### *5.4.1.1 ஆங்கிலப் பேச்சுப் பயிற்சி*

மின்னுரு வளங்கள் மூலம் 6 முதல் 8ஆம் வகுப்பு மாணவர்களிடையே, ஆங்கில மொழித்திறனை வலுப்படுத்த 10,546 பட்டதாரி ஆசிரியர்களுக்கு இணையவழியில் பயிற்சி வழங்கப்பட்டது.

### *5.4.1.2 வாசிப்பு இயக்கம்*

4 முதல் 9ஆம் வகுப்பு மாணவர்களிடையே வாசிப்புத் திறனை மேம்படுத்தும் முன்முயற்சிக்காக 93,704 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இது புத்தக மேலாண்மை, வாசிப்பு நிலைகளின் அடிப்படையில் மாணவர் குழுக்களை உருவாக்குதல், கதை கூறும் திறன் மற்றும் மாணவர்களின் வெளிப்படுத்தும் திறனை வளர்த்தல் போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.

### *5.4.1.3 சிறப்புத் தேவைகள் உடைய குழந்தைகளுக்கான உள்ளடக்கிய கல்வி*

மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டம் (RPWD) பற்றி அறிந்துகொள்ளும் வகையில், 1 முதல் 12 வரையிலான வகுப்புகளைக் கையாளும் 2,01,938 ஆசிரியர்களுக்குச் சிறப்புத் தேவையுள்ள

குழந்தைகளிடம் காணப்படும் 21 வகையான குறைபாடுகளைக் கண்டறிந்து, அவர்களுக்கு உதவுவதற்கும் அவர்களுக்குத் தேவையான ஆதரவையும் தனிப்பட்ட செயல்பாடுகளையும் வழங்குவது சார்ந்தும் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

### *5.4.1.4 மனநலம் மற்றும் வாழ்வியல் திறன்கள்*

பாதுகாப்பு மற்றும் உகந்த கற்றல் சூழலை உருவாக்குவதற்காக, 9 முதல் 12 வரையிலான வகுப்புகளைக் கையாளும் 51,507 ஆசிரியர்களுக்கு 30 வகையான செயல்பாடுகளை உள்ளடக்கிய பயிற்சி வழங்கப்பட்டது. இது மாணவர்களிடையே உணர்வுகளைக் கையாளுதல், தன்கட்டுப்பாடு மற்றும் இன்றியமையாத வாழ்வியல் திறன்கள் போன்றவற்றை மேம்படுத்த உதவுகிறது.

### *5.4.1.5 தகவல் தொழில்நுட்பப் பயிற்சி*

தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள், முதுகலைப் பட்டதாரி, பட்டதாரி மற்றும் இடைநிலை ஆசிரியர்கள் என மொத்தம் 1,64,794 ஆசிரியர்களுக்குத் தகவல் தொழில்நுட்பப் பயிற்சி இணைய வழியாகவும் நேரடியாகவும் வழங்கப்பட்டுள்ளது.

### *5.4.1.6 பாலியல் துன்புறுத்தல்களிலிருந்து பாதுகாக்கும் விழிப்புணர்வு*

குழந்தைகளின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, பாலியல் துன்புறுத்தல்களிலிருந்து குழந்தைகளை எவ்வாறு பாதுகாப்பது என்பது சார்ந்து மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் கட்டகம் உருவாக்கப்பட்டு இணையவழியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இப்பொருள் சார்ந்து மாநில அளவில் 1000 தலைமை ஆசிரியர்களுக்குக் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக அடுத்தடுத்த சுற்றுகளில் அரசு, அரசு உதவி பெறும் தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளைச் சார்ந்த 48,825 பட்டதாரி, முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

### *5.4.1.7 பயிற்றுநர்களுக்கான பயிற்சி (TOT)*

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், வருங்காலத்தில் பயிற்சியளிக்கும் வல்லுநர்களை உருவாக்கும் நோக்கில், பயிற்றுநர்களுக்கான பயிற்சி வழங்கப்படுகிறது.

- **இடைநிலை ஆசிரியர்கள்:** கற்றல், கற்பித்தல் உத்திகளை மேம்படுத்துவதற்கும், ஆசிரியர்–மாணவர் இடையிலான கலந்துரையாடலை வலுப்படுத்துவதற்கும், உள்ளடக்கிய கற்றலுக்கான சூழலை ஏற்படுத்துவதற்கும் 312 இடைநிலை ஆசிரியர்களுக்குப் பயிற்றுநர்களுக்கான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

- **பட்டதாரி ஆசிரியர்கள்:** உயர்தொடக்க நிலையில் தரமான கற்றல், கற்பித்தலை உறுதிசெய்ய 152 பட்டதாரி ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டது.

- **முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள்:** மாநில அளவில் ஏதுவாளர் குழுக்களை உருவாக்கும் வகையில், 9 பாடங்களுக்கான ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சி 450 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு 24 பேராசிரியர்கள், 45 மின்பாடப்பொருள் உருவாக்குவோர் ஆகியோரின் வழிகாட்டுதலுடன் 25 நாள்கள் வழங்கப்பட்டது.

### *5.4.1.8 தொல்லியல் பயிற்சி*

தமிழர் நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம், தொன்மையின் சிறப்பு மற்றும் தொல்லியல் தலங்கள் குறித்த தகவல்களை மாணவர்களுக்குச் சிறப்பாகக்

கொண்டு சேர்ப்பதை நோக்கமாகக் கொண்டு தொல்லியல் பயிற்சி 1000 அரசுப் பள்ளிப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு 6 நாள்கள் உண்டு–உறைவிடப் பயிற்சியாக வழங்கப்படுகிறது. இப்பயிற்சியின் பயனாக ஆசிரியர்கள் தாம் அறிந்த தொல்லியல் கருத்துக்களைப் பாடத்துடன் இணைத்துக் கற்பிப்பதால் மாணவர்களிடம் தமிழ்நாட்டின் தொன்மை வரலாறு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

### *5.4.2 பள்ளித் தலைமைத்துவப் பயிற்சித் திட்டம்*

நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்குப் பள்ளித் தலைமைத்துவம் மற்றும் நிருவாகத் திறன் சார்ந்த பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சித் திட்டம் விரிவான அணுகுமுறையுடன் கல்விசார் மற்றும் தொழில்சார் திறன்களை வளர்ப்பதுடன் பள்ளி மேலாண்மைத்துவம் சார்ந்தும் வழங்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சி, பள்ளிகளில் சிறந்து விளங்கும் உத்திகளைப் பரவலாக்குதல், கலைஞர் நூற்றாண்டு நூலகத்திற்குக் களப்பயணம் மேற்கொள்ளுதல், புத்தகங்கள் மற்றும் திரைப்படங்களை மீளாய்வு செய்தல், மதிப்பீடு செய்தல், பின்னூட்டங்களைத் தொகுத்தல் போன்ற செயல்பாடுகளை உள்ளடக்கியது. 2024ஆம் ஆண்டு ஜூலை முதல் டிசம்பர் மாதம் வரை

4,456 தலைமையாசிரியர்கள் இப்பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளனர்.

### *5.4.3 மதிப்பீட்டுப் புலம்*

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், மாணவர்களின் கற்றல் திறனை அடிப்படை நிலையிலிருந்து உயர்நிலைக்கு மேம்படுத்துதல், ஆசிரியர்களிடையே அறிதல், புரிதல், பயன்படுத்துதல், உயர்சிந்தனை சார்ந்து வினாக்கள் உருவாக்கும் திறனை வளர்த்தல் ஆகியவற்றை முதன்மை நோக்கமாகக் கொண்டு, மதிப்பீட்டுப் புலத்தை நிறுவியுள்ளது.

இன்றியமையாத கற்றல் விளைவுகளை மையப்படுத்திய வினாக்களை உருவாக்குதல், தேசிய அடைவு ஆய்வுக்கு மாணவர்களை ஆயத்தம் செய்தல் மற்றும் இணைய வழியில் மாணவர்களின் கற்றல் அடைவை மதிப்பிடுதல் ஆகியன சார்ந்து மதிப்பீட்டுப் புலத்தில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குப் பயிற்சிகளை வழங்கியுள்ளது. இம்மதிப்பீட்டுப் புலம்வழி உயர் தொழில்நுட்ப ஆய்வகங்களைப் பயன்படுத்தி, திறன் அடிப்படையிலான தேர்வுகளும் வினாடி வினாக்களும் 13,209 அரசுப் பள்ளிகளில் நடத்தப்பட்டுள்ளன.

3, 5, 6, 7, 8 மற்றும் 9ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவர்களின் படித்தல் மற்றும் அடிப்படைக் கணிதத்திறன்களைப் பகுப்பாய்வு செய்வதற்காக, 2468 அரசுப் பள்ளிகளில் பயிலும் 13,145 மாணவர்களிடம் இணைய வழியில் கற்றல் அடைவு ஆய்வு ஐந்து கட்டங்களாக நடத்தப்பட்டன. மேலும், மூன்று பருவத் தேர்வுகளுக்கும் வினாத்தாள்களை உருவாக்கி 6,591 நடுநிலைப் பள்ளிகளில் உயர்தொழில்நுட்ப ஆய்வகத்தின்வழி தேர்வுகள் நடத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் மதிப்பெண்கள் துல்லியமாகப் பதிவுசெய்யப்பட்டு, நிருவகிக்கப்படுவது மாணவர்களின் முன்னேற்றத்தையும், கற்றல் அடைவுகளையும் தொடர்ச்சியாகத் திறம்படக் கண்காணிக்க உதவுகிறது.

### *5.4.4 மாநில அளவிலான அடைவுத்தேர்வு (SLAS) – 2025*

மாநில அளவிலான அடைவுத் தேர்வு (SLAS) 2025 பிப்ரவரி 4 முதல் 6 வரை நடத்தப்பட்டது. 45,924 பள்ளிகளிலிருந்து மூன்றாம் வகுப்பில் 3,08,701; ஐந்தாம் வகுப்பில் 3,43,270; எட்டாம் வகுப்பில் 3,28,370 ஆக மொத்தம் 9,80,341 மாணவர்களுக்கு OMR விடைத்தாள் மூலம் இந்த அடைவுத்தேர்வு நடத்தப்பட்டது. இதன் முடிவுகள் பல்வேறு பாடங்களின் கற்றல்

இடைவெளிகளை அடையாளம் காணவும் கல்விசார் இலக்குகளுக்கான செயல்பாடுகளைத் திட்டமிடவும் உதவுகிறது. அதன் அடிப்படையில் ஆசிரியர்கள் தங்களின் கற்றல்–கற்பித்தல் உத்திகளைச் சீரமைக்கவும் மாணவர்களின் புரிதலுடன்கூடிய உயர்சிந்தனைத் திறனை மதிப்பிடவும் இயலும்.

### *5.4.5 கற்றல் இழப்புகளைக் குறைப்பதற்கான சிறப்பு முன்னெடுப்புகள்*

**எண்ணும் எழுத்தும்:**

கோவிட்–19 பெருந்தொற்றுக் காலத்தில் தொடக்க வகுப்பு மாணவர்களுக்கு ஏற்பட்ட கற்றல் இடைவெளியைக் குறைப்பதற்காக தமிழ்நாடு அரசின் முன்னோடித்திட்டமான எண்ணும் எழுத்தும் தொடங்கப்பட்டது. தற்போது அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் உள்ள 1 முதல் 5 வகுப்பு வரை நடைமுறைப்படுத்தப்பட்டு, நிலைவாரியான மாணவர் பயிற்சி நூல்கள், ஆசிரியர் கையேடுகள் மற்றும் கற்றல் கற்பித்தல் பொருட்கள் ஆகியன உருவாக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. வரைதல், பாடுதல், கதை கூறுதல், பொம்மலாட்டம் மற்றும் விளையாட்டுகள் போன்ற செயல்பாடுகள் மூலம்

கற்றல் மகிழ்வானதாக்கப்படுகிறது. ரூ.152 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின்கீழ் 1.13 இலட்சம் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் சிறப்புப் பயிற்சி பெற்றனர். 1 முதல் 5 வகுப்புகளில் 37,767 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் 25.08 இலட்சம் மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

### *5.4.6 மாநில வள மையம்*

மாநில வள மையம் என்பது, நவீன கற்பித்தல் முறைகள் மற்றும் ஆசிரியர் பணித்திறன் மேம்பாடு ஆகியவற்றிற்கு மையமாக விளங்குகிறது. ஆசிரியர் பணியில் தொடர் முன்னேற்றத்திற்கு உதவப் பணிமனைகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சித் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. எண்ணும் எழுத்தும் திட்டத்தைச் சார்ந்து, ஒவ்வொரு பாடத்திற்குமான அறைகள், தகவல் தொழில்நுட்ப ஆய்வகம், புதுமை மையம் (Innovation Hub), STEM & DIY அறைகள் மற்றும் சிறப்புத் தேவையுடைய குழந்தைகளுக்கான ஆய்வகம் ஆகியவற்றின் மூலம் புதுமையான கற்றல் அனுபவத்தை இம்மையம் வளர்க்கிறது.

### *5.4.7 ஆராய்ச்சிச் செயல்பாடுகள்*

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் புதுமைகளை ஊக்குவித்தல், கற்றலுக்கான தடைகளைக் கண்டறிந்து நீக்குதல், கல்விசார் திட்டங்களை மதிப்பிடுதல் முதலியவற்றில் ஆய்வு செய்ய ஆசிரியர்களின் திறமைகளை தொடர்ந்து மேம்படுத்துகின்றது. 2024–25ஆம் கல்வியாண்டில் 294 செயலாராய்ச்சிகளும், 64 ஆராய்ச்சி ஆய்வுகளும் கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### *5.4.8 ஆய்வக உதவியாளர்களுக்கான பயிற்சி*

அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் 5061 ஆய்வக உதவியாளர்களுக்கு ஆய்வகப் பணிகள் குறித்தும், ஆய்வகத்திலுள்ள அனைத்து உபகரணங்களைக் கையாளுதல் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் பயிற்சி வழங்கப்பட்டது. இதற்காக அறிவியல் பாடங்கள் சார்ந்து கையேடு தயாரிக்கப்பட்டு, பங்கேற்பாளர்களை மதிப்பீடு செய்வதற்காகப் பின்தேர்வு நடத்தப்பட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

### *5.4.9 அணுகக்கூடிய மின்னுரு பாடப்புத்தகங்கள் (Accessible Digital Textbooks – ADT)*

பார்வைக் குறைபாடுள்ள மாற்றுத்திறன் மாணவர்களுக்காக அவர்களும் மற்ற சக மாணவர்கள் போலவே கல்வியியல் பொருள்களை அணுக இயலும் வகையில் அணுகக்கூடிய மின்னுரு பாடப்புத்தகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள பாடப்புத்தகங்கள் மூன்று நிலைகளாக (வகுப்பு வாரியாக 1 முதல் 5, 6 முதல் 10 மற்றும் 11 & 12) என உருவாக்கப்பட்டுள்ளன. பார்வைக் குறைபாடுள்ள மாணவர்கள் பயிலும் பள்ளிகள் மற்றும் இதரப் பள்ளிகள் ஆகியவற்றிலுள்ள மாணவர்களை ஈடுபடுத்தி அணுகக்கூடிய மின்னுரு பாடப்புத்தகங்கள் மீளாய்வு செய்யப்பட்டு adt.tnschools.gov.in என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

### *5.4.10 மின் பாடப்பொருள் புலம்*

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் மின் பாடப்பொருள் புலம் மூலம் சிக்கலான கருத்துகளை எளிமையாக்க, திறன்மிகு பலகைக்கான பாடப்பொருள், அசைவூட்டப்பட்ட கதைகள் மற்றும் மின்னுரு பணித்தாள்கள் ஆகியவை உருவாக்கப்பட்டுள்ளன. புத்தகப் பூங்கொத்துக்

கதைகளை மின்னுரு மயமாக்கி மின் நூலகமும் உருவாக்கப்பட்டு, தொடக்கநிலை வகுப்புகளுக்காக, பாடநூல் கருத்துகளை அடிப்படையாகக்கொண்டு 250 அசைவூட்டப் படக்கதைகள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் விளையாட்டு அடிப்படையில் கற்பதற்கு ஒலியியல் அட்டைகள், 670 தகவல் பரிமாற்ற பணித்தாள்கள் உதவுகின்றன.

110 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்குக் காணொலிகளுக்கான பாட வடிவம் உருவாக்கப்பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்களுள் 47 ஆசிரியர்கள் பாடப்பொருள் தயாரிக்க காணொலி வழங்குபவர்களாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

### *5.4.11 கல்வித் தொலைக்காட்சி*

தமிழ்நாட்டின் கல்வித் துறைக்கென தனிப்பட்ட கல்வித் தொலைக்காட்சி, அதிநவீன வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்டுள்ளது. 4 உயர் தொழில்நுட்ப படப்பதிவுக் கூடமும், ஒரு மெய்நிகர் படப்பதிவுக் கூடமும் உயர்தரமான மின்பாடப்பொருள்களை உருவாக்குவதற்காகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. படப்பதிவு நிலையத்தைப் பயன்படுத்தி காணொலி உரைகள், இயங்கு படங்கள் மற்றும்

உருவகக் கலந்துரையாடல்கள் போன்றவை 1 முதல் 12 ஆம் வகுப்புகளுக்கு உருவாக்கப்பட்டு ஒளிபரப்பப்படுகின்றன.

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் இந்தியாவில் உள்ள பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களின் போட்டித் தேர்வுகளில் பங்கேற்பதற்கு உதவும் வகையில், முந்தைய ஆண்டு வினாத்தாள்களுக்கான தீர்வை விளக்கும் காணொலிகள், பாடப்பொருள் உருவாக்கக் குழுவால் தயாரிக்கப்பட்டு கல்வித் தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பப்படுகின்றன. மேலும், கூடுதலாக எண்ணும் எழுத்தும் திட்டத்திற்காக, இயங்கு படங்கள், காணொலிகள், இசையுடன் கூடிய பாடல்கள், உச்சரிப்பு அட்டைகள் மற்றும் வகுப்பறை விளக்கக் காணொலிகள் என 1027 காணொலிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசின் சிறப்புத் திட்டங்களான நான் முதல்வன் திட்டம், வானவில் மன்றம், கலைத் திருவிழா, நம்ம பள்ளித் திட்டம் போன்றவற்றினை ஆவணப்படுத்துதலில் கல்விச் செயல்பாடுகளுக்கு அப்பாலும், கல்வித் தொலைக்காட்சி செயலாற்றுகிறது. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை கல்வித்

தொலைக்காட்சி உதவியுடன் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் பிற போட்டித் தேர்வுகளுக்கான 1500 காணொலிகளை உருவாக்கி போட்டித் தேர்வாளர்கள் தங்களைத் தயார்படுத்திக் கொண்டு தங்கள் இலக்கை அடையும் வகையில் ஒளிபரப்பப்படுகின்றன.

### *5.4.12 உடற்கல்விக்கான கலைத்திட்டம் மற்றும் வளநூல்கள்*

உடற்கல்வியானது, மாணவர்களிடையே உடல் இயக்கச் செயல்பாட்டுத் திறன்கள், உடலுறுதி, குழுச்செயல்பாடு மற்றும் மீள்தன்மையை வளர்க்கிறது. தொடக்கநிலை (1–5) உயர்நிலை (6–10) மற்றும் மேல்நிலை (11–12) வகுப்பு மாணவர்களுக்குக் கலைத்திட்டம் மற்றும் ஆசிரியர் வளநூல் தயாரிக்கப்பட்டுள்ளது. இவை வரும் கல்வியாண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன.

### *5.4.13 அடிப்படைக் கணினி அறிவியல் மற்றும் செயற்கை நுண்ணறிவுக் கலைத்திட்டம்*

அடிப்படைக் கணினி அறிவியல் மற்றும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த கலைத்திட்டம் மற்றும் பாடத்திட்டம் வல்லுநர் குழுவால் தயாரிக்கப்பட்டு

மீளாய்வு செய்யப்பட்டது. கள ஆய்வுக்குப் பின்பு இதற்கான கட்டகங்கள் ஆங்கிலத்தில் தயார் செய்யப்பட்டு, தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

## 5.5 நிதி ஒதுக்கீடு

இந்நிறுவனத்திற்காக 2025–26 ஆம் ஆண்டு ரூ.176.14 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 6. அரசுத் தேர்வுகள் இயக்ககம்

## 6.1 அறிமுகம்

அரசுத் தேர்வுகள் இயக்ககம், இடைநிலை (10ஆம் வகுப்பு), மேல்நிலை முதலாமாண்டு (11ஆம் வகுப்பு), மேல்நிலை இரண்டாம் ஆண்டு (12ஆம் வகுப்பு) பொதுத்தேர்வுகளை நடத்துவதற்குப் பொறுப்பேற்றுள்ளது. இந்த முக்கியத் தேர்வுகள் மட்டுமின்றி, உயர்கல்வியை மேம்படுத்துவதற்கும் இடைநிற்றலை தவிர்க்கும் பொருட்டும், இயக்ககம் உதவித்தொகைத் தேர்வுகளையும் நடத்துகிறது.

## 6.2 தொலைநோக்கு

தேர்வுக்கான ஒவ்வொரு நிலையிலும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனுடன் நடத்துதல்.

## 6.3 குறிக்கோள்கள்

- நேர்மையான மற்றும் வெளிப்படையான தேர்வுகளை நடத்துதல்.

- தேர்வு முடிவுகளை சரியான நேரத்தில் துல்லியமாக வெளியிடுதலை உறுதி செய்தல்.
- பதிவுகளை டிஜிட்டல் மயமாக்குதல்.
- மதிப்பீட்டு முறையில் சீர்திருத்தங்களைச் செயல்படுத்துதல்.
- அனைத்து மாணவர்களுக்கும் சம வாய்ப்புகளை வழங்குதல்.

## 6.4 செயல்பாடுகள்

அரசுத் தேர்வுகள் இயக்ககம் 40 வகையான தேர்வுகளை மாநிலம் முழுவதும் உள்ள 32 உதவி இயக்குநர் அலுவலகங்கள் மூலம் தேர்வுப்பணிகளை சுமுகமாக மேற்கொண்டு வருகிறது.

## 6.5 பொதுத்தேர்வுகள்

### *6.5.1 இடைநிலை / மேல்நிலை பொதுத்தேர்வு*

அரசுத் தேர்வுகள் இயக்ககம் மூலம் 12,480 பள்ளிகளில் பயிலும் 8,86,876 மாணவர்களுக்கு மார்ச்/ஏப்ரல்–2025இல் பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வு நடத்தப்படுகிறது. மேலும், மேல்நிலை முதலாமாண்டுத் தேர்வில் 7,557 பள்ளிகளைச் சேர்ந்த 8,18,369 மாணவர்களும் மேல்நிலை இரண்டாம் ஆண்டுத்

தேர்வில் 7,518 பள்ளிகளைச் சேர்ந்த 8,02,568 மாணவர்களும் தேர்வெழுதியுள்ளனர்.

### *6.5.2 தொடக்கக் கல்விப் பட்டயத் தேர்வு*

அரசுத் தேர்வுகள் இயக்ககம் 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்குத் தொடக்கக்கல்வி பட்டயத் தேர்வை நடத்துகிறது. ஜூன்/ஜூலை 2024இல் நடைபெற்ற முதல் மற்றும் இரண்டாம் ஆண்டுத் தேர்வினை 3,475 தேர்வர்கள் தேர்வெழுதியுள்ளனர்.

## 6.6 பள்ளி மாணாக்கர்களுக்கான படிப்புதவித் தொகைத் தேர்வுகள்

**தமிழ்நாடு முதலமைச்சர் திறனறித் தேர்வு** 2023-2024ஆம் கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. அரசுப் பள்ளிகளில் 10ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களின் திறனைக் கண்டறிந்து ஊக்குவிப்பதற்கு ஆண்டுதோறும் 1000 மாணவர்களுக்கு கல்வியாண்டுக்கு ரூபாய் பத்தாயிரம் (10 மாதங்களுக்கு மாதத்திற்கு ரூபாய் ஆயிரம் வீதம்) இரண்டாண்டுகளுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஜனவரி 2025இல் நடைபெற்ற

தேர்வில் மொத்தம் 1,39,415 மாணவர்கள் தேர்வெழுதினர்.

**தமிழ் மொழி இலக்கியத் திறனறித் தேர்வு** தமிழ் மொழி மற்றும் இலக்கியத் திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆண்டுதோறும் 1,500 மாணவர்கள் (750 அரசுப் பள்ளி மாணவர்கள் மற்றும் 750 அரசுப் பள்ளி மாணவர்கள் உள்ளிட்ட பிற தனியார் பள்ளி மாணவர்கள்) மாதம் ரூ.1,500 வீதம் இரண்டாண்டுகளுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. டிசம்பர் 2024இல் நடைபெற்ற இத்தேர்வில் 11 ஆம் வகுப்பு மாணவர்கள் 2,35,022 பேர் கலந்து கொண்டனர்.

**தமிழ்நாடு ஊரகப் பகுதி மாணவர்களுக்கான திறனாய்வுத் தேர்வு** (TRUST) 1991–92ஆம் கல்வியாண்டில் தொடங்கப்பட்டு, 9ஆம் வகுப்பு பயிலும் கிராமப்புற மாணவர்களை ஊக்குவிப்பதற்காக நடத்தப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 100 பேருக்கு (50 மாணவர்கள் மற்றும் 50 மாணவியர்கள்) ஆண்டுக்கு ரூ.1,000 வீதம் நான்கு ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது. 1,08,208 மாணவர்கள் பிப்ரவரி, 2025இல் நடைபெற்ற இத்தேர்வை எழுதி உள்ளனர்.

**தேசிய வருவாய் வழி மற்றும் திறன் படிப்புதவித் தொகைத் தேர்வு** (NMMS) ஒன்றிய அரசால் செயல்படுத்தப்படுகிறது. இது 8ஆம் வகுப்பில் குறைந்தபட்சம் 55% மதிப்பெண்கள் பெற்ற, பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய மாணவர்களை ஊக்குவிக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட 6,695 மாணவர்கள் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை நான்கு ஆண்டுகளுக்கு ஆண்டுக்கு ரூ.12,000 உதவித்தொகை பெறுகின்றனர். பிப்ரவரி, 2025இல் நடைபெற்ற இத்தேர்வில் 2,30,337 மாணவர்கள் கலந்துகொண்டனர்.

## 6.7 பட்டதாரி இளைஞர்களுக்கான உதவித் தொகைத் தேர்வுகள்

**நான் முதல்வன் குடிமைப்பணி முதல்நிலை படிப்புதவித் தொகைத் தேர்வு** தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) சார்பாக, அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் நடத்தப்படுகிறது. மத்திய அரசுப்பணியாளர் தேர்வாணைய குடிமைப்பணித் தேர்வெழுதும் 1000 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 10 மாதங்களுக்கு மாதத்திற்கு ரூ.7,500 வழங்கப்படுகிறது. செப்டம்பர் 2024இல் நடைபெற்ற இத்தேர்வில் 26,587 தேர்வர்கள் கலந்துகொண்டனர்.

**நான் முதல்வன் உறைவிட பயிற்சி நுழைவுத் தேர்வு** மூலமாக இலவச தங்குமிட வசதி, உணவு மற்றும் பயிற்சி ஆண்டுதோறும் 300 SSC மற்றும் ரயில்வே தேர்வு ஆர்வலர்களுக்கும், 700 வங்கித்தேர்வு ஆர்வலர்களுக்கும் வழங்கப்படுகிறது. 2024 ஜூலையில் நடத்தப்பட்ட இத்தேர்விற்கு 21,080 தேர்வர்கள் பதிவு செய்தனர்.

## 6.8 பிற தேர்வுகள்

தனித்தேர்வர்களுக்குக் குறைந்தபட்ச எட்டாம் வகுப்பு கல்வித் தகுதியை வழங்க **எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு** நடத்தப்படுகிறது. ஆகஸ்ட் 2024இல் நடைபெற்ற இத்தேர்வில், 3,647 தேர்வர்கள் தேர்வெழுதினர். ஜூன் / ஜூலை மாதங்களில் 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்கள் அவர்கள் தோல்வியுற்ற பாடங்களில் மீண்டும் தேர்வெழுதித் தேர்ச்சி பெற்று அதே கல்வியாண்டிற்குள் உயர்கல்வியைத் தொடர்வதற்காகத் **துணைத்தேர்வுகள்** நடத்தப்படுகின்றன.

அரசுத் தேர்வுகள் இயக்ககம், மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (UPSC) மற்றும் மத்திய பணியாளர் தேர்வாணையத்தால் (SSC) ஆண்டுதோறும்

சென்னையில் நடத்தப்படும் தேர்வுகளுக்கு ஒருங்கிணைப்பு முகமையாகச் செயல்படுகிறது.

## 6.9 மாணவர் நலன் முன்னெடுப்புகள்

1. **சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு** (CWSN), கட்டண விலக்குகள், தேர்வெழுதக் கூடுதல் நேரம், தரைத்தள இருக்கை வசதி, தனி அறை, சொல்வதை எழுதுபவர் உதவி மற்றும் 10ஆம் வகுப்பு மாணவர்களுக்கு செய்முறைத் தேர்வு விலக்கு உள்ளிட்ட பல்வேறு தேர்வுச் சலுகைகள் வழங்கப்படுகின்றன. மேலும், பார்வைக் குறைபாடுள்ள மாணவர்கள் தற்சமயம் கணினித் திரை வாசிப்பு மென்பொருளைப் பயன்படுத்தித் தேர்வுகளை எழுதலாம்.

2. பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலைத் தேர்வினை **தமிழ் வழியில்** எழுதும் மாணவர்களுக்கு தேர்வுக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 2024–25 ஆம் கல்வியாண்டில் பத்தாம் வகுப்பு 4,23,599; மேல்நிலை முதலாம் ஆண்டு 3,75,080; மேல்நிலை இரண்டாம் ஆண்டு 3,75,255 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

3. **இடைநிற்றலைத் தவிர்க்கும்** பொருட்டு, துணைத் தேர்விற்கு விண்ணப்பிக்கும் அரசு மற்றும் உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்குத் தட்கல் கட்டணம் விலக்களிக்கப்பட்டுள்ளது. மேலும், விண்ணப்பிக்கும் கால அவகாசம் 7இல் இருந்து 15 நாட்களாக நீட்டிக்கப்பட்டுள்ளது.

### 6.10 பொது நலன் மற்றும் மின்னணு முன்னெடுப்புகள்

மாணவர்கள் தங்கள் சான்றிதழ்களை மின்னணுச் சான்றிதழ்களாக பதிவிறக்கம் செய்து கொள்ள **மின் ஆவணக் காப்பகம்** (DigiLocker) உதவுகிறது. மாணவர்களின் வசதிக்காக 2024ஆம் ஆண்டு வரை 1.56 கோடி (2016–2024) சான்றிதழ்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

வெளிநாடு செல்ல விரும்பும் மாணவர்களின் மதிப்பெண் சான்றிதழ்களுக்கு மின்னணு முறையில் சான்றளிக்கும் வசதி **இ–சனத்** (e–SANAD) வலைதளம் மூலம் வழங்கப்படுகிறது. தற்போது வரையிலும் 2,477 சான்றிதழ்கள், மின்னணு முறையில் சான்றளிக்கப்பட்டுள்ளன.

அனைத்து பொதுத் தேர்வுகளுக்கும் தனித்தேர்வர்கள் இணைய வழியில் விண்ணப்பிக்க உதவுவதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட 252 பள்ளி வளாகங்களில் அரசுத் தேர்வுகள் சேவை மையங்கள் செயல்படுகின்றன. மேலும், **அரசு இ–சேவை மையங்களின்** வழியே இரண்டாம்படி மதிப்பெண் சான்றிதழ், சான்றிட்ட மதிப்பெண் நகல், வெளி மாநிலம் அல்லது வெளிநாடுகளில் உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கான புலப்பெயர்ச்சி சான்றிதழ், தனித்தேர்வர்கள் தமிழ் வழியில் பயின்றமைக்கான சான்று ஆகிய இணைய வழிச் சேவைகள் வழங்கப்படுகின்றன.

மிக்ஜாம் மற்றும் ஃபெங்கல் புயல்களைத் தொடர்ந்து, அசல் மதிப்பெண் சான்றிதழ்களை இழந்த 6,614 மாணவர்களுக்கு இரண்டாம்படி மதிப்பெண் சான்றிதழ்கள் கட்டணமின்றி வழங்கப்பட்டன.

### 6.11 இணையதள சேவைகள் (www.dge.tn.gov.in)

மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு உதவும் வகையில் பிரத்யோகமான வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

- தேர்வு அறிவிப்புகள், தேர்வுக்கால அட்டவணைகள் மற்றும் விண்ணப்பப் படிவங்கள், தேர்வுக் கட்டண விவரங்கள் மற்றும் தேர்வர்களுக்கான அறிவுரைகள்.
- முந்தைய ஆண்டுத் தேர்வுகளின் வினாத்தாட்கள்/மாதிரி வினாத்தாட்கள்.
- இரண்டாம்படி மற்றும் சான்றிட்ட மதிப்பெண் நகல் விண்ணப்பப் படிவங்கள்; புலப்பெயர்ச்சி சான்றிதழ் விண்ணப்பப் படிவங்கள்.
- தேர்வுக்கூட நுழைவுச் சீட்டு பதிவிறக்கம்; இணைய வழி தேர்வுக் கட்டணம் செலுத்துதல்.
- மதிப்பெண் சான்றிதழ்களின் உண்மைத்தன்மை அறிதல்.

## 6.12 சிறைச்சாலைகளில் தேர்வு மையங்கள்

சிறைவாசிகள் கல்வி வாய்ப்பினைப் பெற, சிறை வளாகத்திற்குள் பொதுத்தேர்வுகள் நடத்தப்படுகின்றன. 2024–25ஆம் கல்வியாண்டில், 8, 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்புத் தேர்வுகளுக்கு 873 சிறைவாசிகள் தனித் தேர்வர்களாகப் பதிவு செய்துள்ளனர்.

## 6.13 தேர்வு முடிவுகள் வெளியிடுதல்

மாணவர்கள் தங்களது தேர்வு முடிவுகளைக் குறுஞ்செய்தியாக (SMS) பெறுகின்றனர். மேலும் தேர்வு முடிவுகள் www.dge.tn.gov.in மற்றும் https://tnresults.nic.in என்ற இணைய தளங்களிலும் வெளியிடப்படுகின்றன. அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலை (TML) இணையதளம் வாயிலாகப் பள்ளிகளே பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும், 10ஆம் வகுப்பு, 11 & 12 வகுப்பு மற்றும் தொடக்கக் கல்விப் பட்டயத் தேர்வுகளுக்கு விடைத்தாட்களின் நகல்கள் கோரி விண்ணப்பித்து, பதிவிறக்கம் செய்து பின் மறுகூட்டல் / மறு மதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்கலாம்.

## 6.14 சான்றிதழ்கள் வழங்குதல்

- இடைநிலை, மேல்நிலைத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட மறுநாள் முதல் மாணவர்கள் தங்களது தற்காலிக மதிப்பெண் பட்டியல்/ மதிப்பெண் சான்றிதழை www.dge.tn.gov.in என்ற வலைதளம் வாயிலாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

- மோசடிகளைத் தவிர்க்கும் பொருட்டு, மேம்பட்ட பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கு மதிப்பெண் பட்டியலும், ஒன்றுக்கு மேற்பட்ட முறை எழுதித் தேர்ச்சி பெறும் மாணவர்கள் ஒருங்கிணைந்த மதிப்பெண் சான்றிதழையும் பெறுகின்றனர்.
- 2024–25 ஆம் ஆண்டு 17,790 இரண்டாம்படி மதிப்பெண் சான்றிதழ்களும் 2,377 மதிப்பெண் சான்றிதழ்களின் சான்றிட்ட நகல்களும் வழங்கப்பட்டுள்ளன.
- பிற மாநிலங்களில் மேற்படிப்பைத் தொடர விரும்பும் தேர்வர்களுக்குப் புலப்பெயர்ச்சி சான்றிதழ் விண்ணப்பம் பெறப்பட்ட 5 தினங்களுக்குள் வழங்கப்படுகிறது. 2024–25ஆம் ஆண்டில் 8,947 புலப்பெயர்ச்சி சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.
- நியமன அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்ட 3,49,033 மதிப்பெண் சான்றிதழ்களுக்கு உண்மைத் தன்மை சரிபார்த்து வழங்கப்பட்டுள்ளது.

### 6.15 நிதி ஒதுக்கீடு

இவ்வியக்ககத்திற்கு, 2025–26ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் ரூ.133.90 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 7. பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி

## 7.1 அறிமுகம்

சமத்துவத்துவத்துடன் கூடிய சமுதாயத்திற்கான ஒரு முக்கிய உந்து சக்தியாக விளங்கும் கல்வி, தனிமனித வாழ்விலும் சமுதாயத்திலும் குறிப்பிடத்தக்க மாற்றத்தை உருவாக்குகிறது. முறையான பள்ளிப்படிப்பைத் தவறவிட்டவர்களுக்கு கற்றல் வாய்ப்புகளை வழங்குவதிலும், அவர்கள் அறிவு மற்றும் பொருளாதார ரீதியாகத் தொடர்ந்து முன்னேற்றம் அடைவதை உறுதி செய்வதிலும் வயது வந்தோர் கல்வி முக்கிய பங்கு வகிக்கிறது.

பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககம் (DNFAE) 1976ஆம் ஆண்டு நிறுவப்பட்டதிலிருந்து, பல்வேறு வயதுவந்தோர் கல்வித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இவை மாநிலத்தில் எழுத்தறிவின்மையை முற்றிலும் நீக்கி 100% எழுத்தறிவை அடைவதை முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளன.

## 7.2 தொலைநோக்கு

தமிழ்நாட்டில் அனைத்து வயதுவந்தோருக்கும் அடிப்படைக் கல்வி மற்றும் வாழ்நாள் முழுவதும்

கற்கும் வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் முழு எழுத்தறிவை அடைதல்.

### 7.3 நோக்கங்கள்

- எழுத்தறிவற்ற வயதுவந்தோருக்கு அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவை வழங்குதல்.
- புதிதாக எழுத்தறிவு பெற்றவர்கள் தொடர்ந்து கற்கவும், முறையான கல்விக்கு இணையான சமநிலைக் கல்வியை அடையவும் உதவுதல்.
- தொழிற்திறன் பயிற்சியை வழங்குவதன் முலம் வேலைவாய்ப்பில் மேம்பாட்டையும், வாழ்க்கைத் தரத்தில் முன்றேற்றத்தையும் உருவாக்குதல்.
- நிலையான அறிவு மேம்பாட்டினைத் தக்க வைக்கும் வகையில் வாழ்நாள் முழுவதும் கற்றல் மற்றும் தொடர் கல்வியை ஊக்குவித்தல்.

### 7.4 சிறைவாசிகளுக்கான சிறப்பு எழுத்தறிவுத் திட்டம் (2024–25)

சிறைத் துறையுடன் ஒருங்கிணைந்து பல்வேறு மாவட்டங்களில் உள்ள மத்திய மற்றும் மாவட்ட சிறைச்சாலை வளாகங்களில் ரூ.30 இலட்சம்

செலவில் சிறப்பு எழுத்தறிவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் எழுதப்படிக்கத் தெரியாத 1,470 சிறைவாசிகளுக்கு அடிப்படை எழுத்தறிவு வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்கான எழுத்தறிவு மற்றும் எண்ணறிவுத் திறன்கள் சார்ந்த செயல்பாடுகள் தன்னார்வலர்கள் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 7.5 புதிய பாரத எழுத்தறிவு திட்டம்

புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம் (2022–27) அனைத்து மாவட்டங்களிலும் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் 60:40 என்கிற நிதிப் பங்களிப்பு முறையைப் பின்பற்றிச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2024–25ஆம் ஆண்டில், 5.33 இலட்சம் எழுதப்படிக்கத் தெரியாத வயதுவந்தோரை (15+ வயதுடையவர்கள்) இலக்காகக் கொண்டு, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் அமைக்கப்பட்ட 30,113 எழுத்தறிவு மையங்களில் 5.09 இலட்சம் கற்போர் சேர்க்கப்பட்டனர். இம்மையங்களில் 30,113 தன்னார்வலர்கள் உதவியுடன் கற்பித்தல் மற்றும் கற்றல் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. 2024–25ஆம் கல்வியாண்டில் இதற்காக ரூ.9.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இக்கற்போர்க்கு அடிப்படை எழுத்தறிவு மதிப்பீட்டுத் தேர்வு நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. 2027ஆம் ஆண்டிற்குள் 100% எழுத்தறிவை அடைவதற்கு மாநிலம் உறுதிபூண்டுள்ளது. 2022–23 முதல் 2024–25 வரையிலான காலகட்டதிற்குள் 15 இலட்சம் கற்போர் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

### 7.6 புதிய எழுத்தறிவு பெற்றவர்களுக்கான அடிப்படைக் கல்வித் திட்டம்

பல்வேறு வயது வந்தோர் கல்வித் திட்டங்களின் கீழ் அடிப்படை எழுத்தறிவை முடித்த புதிய கற்போர்க்குத் தொடர் கல்வி வழங்கும் வகையில், 5ஆம் வகுப்பிற்கு நிகரான தொடக்க நிலை அடிப்படைக் கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 7.7 நான்கு ஆண்டு சாதனைகள் (2021–25)

2021–22ஆம் ஆண்டு முதல் 2024–25ஆம் ஆண்டு வரை பல்வேறு வயதுவந்தோர் கல்வித் திட்டங்கள் மொத்தம் ரூ.39.21 கோடி செலவினத்தில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டதன் வாயிலாக 20 இலட்சம் கற்போர் பயனடைந்துள்ளனர்.

குறிப்பிடத்தக்க திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு:

| திட்டத்தின் பெயர் | பயனாளிகள் | செலவினம் (ரூ.கோடியில்) |
|---|---|---|
| கற்போம் எழுதுவோம் இயக்கம் (2020–22) | 3,19,088 | 7.19 |
| சிறப்பு எழுத்தறிவுத் திட்டம் (இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் 2020–23) | 1,68,945 | 6.23 |
| சிறைவாசிகளுக்கான சிறப்பு எழுத்தறிவுத் திட்டம் (2023–25) | 2,647 | 0.55 |
| புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம் (2022–25) | 15,18,850 | 25.24 |
| **மொத்தம்** | **20,09,530** | **39.21** |

## 7.8 நிதி ஒதுக்கீடு

2025–26 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் இவ்வியக்ககத்திற்கு ரூ.16.30 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 8. ஆசிரியர் தேர்வு வாரியம்

## 8.1 முன்னுரை

அரசுப் பள்ளிகளுக்குத் தகுதியான ஆசிரியர்களையும், அரசுக் கல்லூரிகளுக்குப் பேராசிரியர்களையும் தெரிவு செய்வதற்காக ஆசிரியர் தேர்வு வாரியம் (TRB) 1987ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தொடங்கப்பட்டதிலிருந்து, இந்த வாரியம் தமிழ்நாடு முழுவதும் 1,72,793 ஆசிரியர்கள் மற்றும் பேராசிரியர்களைத் தெரிவு செய்ய உதவியுள்ளது. மேலும் இது தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வு (TNTET) நடத்தும் மாநில முகவாண்மை நிறுவனமாக (Nodal Agency) செயல்படுகிறது.

ஆசிரியர் தேர்வு வாரியம் மறுசீரமைப்புக்குப் பின்னர், கூடுதல் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டுள்ளது.

- முதலமைச்சரின் ஆராய்ச்சி உதவித் தொகை (CMRF) திட்டத்திற்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பது.
- அண்ணா பல்கலைக்கழகத்தில் உதவிப் பேராசிரியர் பதவிகளுக்கான தேர்வுகளை நடத்துதல்.

- உதவிப் பேராசிரியர்களுக்கான முக்கிய தகுதியான மாநில தகுதித் தேர்வினை (SET) நடத்தும் முகவாண்மை நிறுவனமாக (Nodal Agency) செயல்படுதல்.

மேலும், வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்காக, தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி தெரிவுப் பணிகள் தமிழ்நாடு மின்–ஆளுமை நிறுவனத்துடன் (TNeGA) இணைந்து மேற்கொள்ளப்படுகிறது.

## 8.2 நோக்கம்

ஆசிரியர் தேர்வு வாரியத்தின் முதன்மைக் குறிக்கோள், அந்தந்தத் துறைகளால் அறிவிக்கப்படும் காலிப் பணியிடங்களின் அடிப்படையில் தகுதியான ஆசிரியர்கள் மற்றும் பேராசிரியர்களைத் தெரிவுசெய்து அளிப்பதாகும்.

## 8.3 தெரிவுகள்

### *8.3.1 ஆசிரியர் மற்றும் பேராசிரியர் தெரிவுகள்*

ஆசிரியர் தேர்வு வாரியமானது 2024, பிப்ரவரி 4, அன்று **3,192 பட்டதாரி ஆசிரியர்கள் / வட்டார வள மைய பயிற்றுநர் காலிப் பணியிடங்களுக்கான** போட்டித்

தேர்வை வெளிப்படையான முறையில் நடத்தியது. மொத்தம் 40,136 பேர் தேர்வு எழுதினர். பாட வாரியான தற்காலிக தெரிவுப் பட்டியல்கள் ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் வெளியிடப்பட்டன.

**2,768 இடைநிலை ஆசிரியர்** காலிப்பணியிடங்களுக்கான தேர்வு OMR முறையைப் பயன்படுத்தி 2024, ஜூலை 21, அன்று நடத்தப்பட்டது. மொத்தம் 25,319 பேர் தேர்வு எழுதியுள்ளனர், தேர்வு முடிவுகளை வெளியிடும் பணி நடைபெற்று வருகிறது.

**அரசு சட்டக் கல்லூரிகளில் 132 இணைப் பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள் மற்றும் உதவிப் பேராசிரியர்கள் (சட்ட முன்படிப்பு)** பணியிடங்களுக்கான நேரடி நியமனத்திற்கான அறிவிக்கை வெளியிடப்பட்டு, இணையவழி விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

**அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் 4,000 உதவிப் பேராசிரியர் பணியிடங்களுக்கான** அறிவிக்கை வெளியிடப்பட்டது. மாநில தகுதித் தேர்வு (SET) முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர் இதற்கான போட்டித் தேர்வு நடத்தப்படும்.

### *8.3.2 அண்ணா பல்கலைக் கழக பணித்தெரிவுகள்*

அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரிகள் மற்றும் உறுப்புக் கல்லூரிகளுக்கான உதவிப் பேராசிரியர், உதவி நூலகர் மற்றும் உதவி இயக்குநர் (உடற்கல்வி) ஆகிய 232 + 88 பணியிடங்களுக்கு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் என அண்ணா பல்கலைக் கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி 232 காலிப் பணியிடங்களுக்கு, போட்டித் தேர்வுகள் நடத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 8.4 மாநில மற்றும் ஆசிரியர் தகுதித் தேர்வுகள்

பள்ளி ஆசிரியர் தகுதித் தேர்வு (TET) சான்றிதழ்கள் (தாள்–I மற்றும் II) ஜூன் 2023 வரை நேரடியாக வழங்கப்பட்டன. 2023, ஜூலை 17 முதல், ஆசிரியர் தகுதித் தேர்வு மறுபிரதி சான்றிதழ்கள் இ–சேவை மையங்கள் மூலம் வழங்கப்படுகிறது. இதன்படி, 9,131 சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

உதவிப்பேராசிரியர் பணியிடங்களுக்கான மாநிலத் தகுதித் தேர்வு 2025, மார்ச் 6 முதல் மார்ச் 9 வரை நடத்தி முடிக்கப்பட்டது.

## 8.5 முதலமைச்சரின் ஆராய்ச்சி உதவித் தொகைத் திட்டம் (CMRF)

மாணவர்களின் ஆராய்ச்சித் திறன்களை மேம்படுத்தவும் புதிய கண்டுபிடிப்புகளை ஊக்கப்படுத்தவும், முதலமைச்சரின் ஆராய்ச்சி உதவித் தொகைத் திட்டம் (CMRF) தொடங்கப்பட்டது. 2023ஆம் ஆண்டில், கல்லூரிக் கல்வி இயக்ககத்தால் 120 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இவ்வுதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக 2025ஆம் ஆண்டில், 180 மாணவர்களைத் தெரிவு செய்வதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

## 8.6 வினா வங்கி மேலாண்மை மென்பொருள் (QBMS)

பல துறைகளுக்கு ஆசிரியர்களைத் தெரிவு செய்யும் பணிகளை மேற்கொள்ளும் ஆசிரியர் தேர்வு வாரியம், பாரம்பரியமாக பாட நிபுணர்களைக் கொண்டு வினாத்தாள் அமைக்கும் முகாம்களை நடத்தியது. இது நேரத்தை எடுத்துக்கொள்ளும் செயல்முறையாகும். இதை நெறிப்படுத்த, தேர்வு வினாக்களைத் திறம்பட சேகரித்தல், நிர்வகித்தல் மற்றும் ஒழுங்கமைத்தல் ஆகியவற்றை அனுமதிக்கும் QBMS மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த மென்பொருள் இணையவழி மற்றும் காகிதவழித் தேர்வுகளுக்கு

தானியங்கி வினாத்தாள் உருவாக்கம் மற்றும் சீரற்றமயமாக்கலைச் செயல்படுத்துகிறது. வரவிருக்கும் தேர்வுகளில் QBMSஐப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. AI பாணினி மென்பொருளும் மொழிபெயர்ப்பு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

## 8.7 மறுசீரமைப்பு மற்றும் நிதிச் செயல்பாடுகள்

ஆசிரியர் தேர்வு வாரியம் மறுசீரமைக்கப்பட்டு, தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் பணியிடங்கள் உட்பட 71 புதிய பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டன. மேலும், ஆசிரியர் தேர்வு வாரிய நிதிப் பரிவர்த்தனைகள் அனைத்தும் தலைவர், ஆசிரியர் தேர்வு வாரியம் என PD கணக்குகளாக மாற்றம் செய்யப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன.

## 8.8 நிதி ஒதுக்கீடு

2025–26ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு ரூ.51.42 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 9. பொது நூலக இயக்ககம்

## 9.1 முன்னுரை

தமிழ்நாட்டில் உள்ள பொது நூலகங்கள் மாநிலத்தில் கல்வி, மற்றும் அறிவுப் பரவலை வளர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. அவை பெரும் எண்ணிக்கையிலான நூல்கள், பருவ இதழ்கள் மற்றும் மின் வளங்களைக் கொண்டு அனைத்து வயதினரும் வாழ்நாள் முழுவதும் கற்றலுக்கு அணுகக்கூடிய மையங்களாக விளங்குகின்றன.

## 9.2 தொலைநோக்கு

சிறந்த வசதிகளுடன் எளிதில் அணுகக்கூடிய பொது நூலகங்கள் மூலம் கல்வி, கலை, பண்பாடு, இலக்கியம், அறிவியல், சமூக–பொருளாதாரம் மற்றும் அறிவுசார் வளர்ச்சியை ஊக்குவித்தல்.

## 9.3 குறிக்கோள்கள்

- வளர்ந்து வரும் தகவல் தேவைகளைப் பூர்த்தி செய்யப் பொது நூலகங்களின் தொழில்நுட்பம் மற்றும் உள்கட்டமைப்பை வலுப்படுத்துதல்.

- எதிர்காலச் சந்ததியினருக்காக அரிய நூல்களை மின்னுருவாக்கம் செய்து பாதுகாத்தல்.
- வாசகர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் உயர்தர நூல்கள் சரியான நேரத்தில் கிடைப்பதை உறுதி செய்தல்.
- மாற்றுத்திறனாளர்களுக்கு ஒலி நூல்கள், மின்நூல்கள் மற்றும் பிரெய்லி நூல்கள் போன்றவற்றை உள்ளடக்கிய வளங்களை வழங்குதல்.

## 9.4 சாதனைகள்

### *9.4.1 புத்தகக் கண்காட்சிகள்*

தமிழ்நாடு முழுவதும் மாவட்ட அளவிலான புத்தகக் கண்காட்சிகள் 2022–23 முதல் நடத்தப்பட்டு வருகின்றன. 2022–23 ஆம் ஆண்டில் ரூ.4.96 கோடி ஒதுக்கப்பட்டு, இதன் மூலம் 55.50 இலட்சம் புத்தக ஆர்வலர்கள் பயனடைந்தனர். இந்த முயற்சியைத் தொடர்ந்து, புத்தகக் கண்காட்சிகளை வெற்றிகரமாக நடத்துவதற்காக 2023–24 முதல் ஆண்டுதோறும் ரூ.8.45 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

### *9.4.2 இலக்கியத் திருவிழாக்கள்*

தமிழ்நாடு தனது நதிக்கரை நாகரிகத்தைப் பல்வேறு பகுதிகளில் பொருநை (திருநெல்வேலி), சிறுவாணி (கோவை), காவேரி (திருச்சி), வைகை (மதுரை) மற்றும் சென்னை இலக்கியத் திருவிழாக்களாகக் கொண்டாடி வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில், இத்திருவிழாக்களுக்கு ரூ.2.18 கோடி ஒதுக்கப்பட்டது. கூடுதலாக, 2023–24 மற்றும் 2024–25ஆம் ஆண்டுகளில் ஆண்டுதோறும் ரூ.30 இலட்சம் ஒதுக்கப்பட்டு இளைஞர் இலக்கியத் திருவிழாக்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளன.

### *9.4.3 சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா*

தமிழ் இலக்கியத்தை உலகளவில் கொண்டு செல்லவும், பன்னாட்டுப் படைப்புகளை தமிழில் மொழிபெயர்ப்பதற்கும் 2023இல் சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா (CIBF) தொடங்கப்பட்டது. இதற்காக ஆண்டுதோறும் ரூ.6 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 2023இல் நடைபெற்ற புத்தகத் திருவிழாவில் 24 நாடுகளுடன் 365 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், 2024இல் 40 நாடுகளுடன் 752 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும்,

2025இல் 64 நாடுகளுடன் 1,354 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்திடப்பட்டுள்ளன.

### *9.4.4 தமிழ் அறிஞர்களை கௌரவித்தல் & நூலக உள்கட்டமைப்பை விரிவுபடுத்துதல்*

தமிழ் இலக்கிய முன்னோடிகளையும் அவர்களின் படைப்புகளையும் காட்சிப்படுத்த, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் ரூ.40 இலட்சம் செலவில் 'செந்தமிழ்ச் சிற்பிகள் அரங்கம்' நிறுவப்பட்டுள்ளது. பத்மஸ்ரீ டாக்டர் எஸ்.ஆர். அரங்கநாதன் நினைவாக, சீர்காழியில் மாதிரி நூலகம் ரூ.1.32 கோடியில் கட்டப்பட்டுள்ளது. மேலும், புலவர் ஆ.கார்மேகனாரின் நினைவாக இராமநாதபுரம் மாவட்டம் அபிராமத்தில் ஒரு புதிய நூலகக் கட்டடம் ரூ.40 இலட்சத்தில் கட்டப்பட்டுள்ளது.

அறிவுசார் தேடலை மேம்படுத்த, Wi–Fi வசதி கொண்ட மின் நூலக சேவைகள் 1,469 கிராமப்புற நூலகங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளன. மாணவர்கள் மற்றும் குழந்தைகள் பயன்பெறும் வகையில், ரூ.57.20 இலட்சம் செலவில் 38 மாவட்டங்களில் உள்ள 76 நூலகங்களில் 152 VR சாதனங்களைக் கொண்ட மெய்நிகர் நூலக அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.

### *9.4.5 நூலகர் பணி*

ஊர்ப்புற நூலகங்களில் சிறப்பு காலமுறை ஊதியம் ரூ.7700 – 24200 என்ற ஊதிய ஏற்ற முறையில் பணியாற்றிய 446 ஊர்ப்புற நூலகர்களுக்கு ரூ.19500– 71900 என்ற முறையான ஊதிய ஏற்ற முறையில் கலந்தாய்வின் மூலம், மூன்றாம் நிலை நூலகர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

### *9.4.6 நூல் கொள்முதல் கொள்கை*

நூல் கொள்முதலில் பாரபட்சமற்ற தன்மையை உறுதி செய்வதற்காக, வெளிப்படையான நூல் கொள்முதல் கொள்கை–2024 அறிமுகம் செய்யப்பட்டது. இது அனைத்துப் பொது நூலகங்களில் நூல்கள் தேர்வு மற்றும் விநியோகத்தை மேம்படுத்துகிறது.

## 9.5 தமிழ்நாட்டில் உள்ள பொது நூலகங்கள்

தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1948இன் கீழ், 1972இல் உருவாக்கப்பட்ட பொது நூலக இயக்குநரகம், 4,681 நூலகங்களை நிர்வகிக்கிறது.

- கன்னிமாரா பொது நூலகம் (மாநில மைய நூலகம்), சென்னை

- அண்ணா நூற்றாண்டு நூலகம், சென்னை
- கலைஞர் நூற்றாண்டு நூலகம், மதுரை
- 37 மாவட்ட மைய நூலகங்கள்
- 1,926 கிளை நூலகங்கள்
- 1,915 ஊர்ப்புற நூலகங்கள்
- 14 நடமாடும் நூலகங்கள்
- 786 பகுதிநேர நூலகங்கள்

மேலும், அரசு உதவி பெறும் நூலகங்களில் தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூலகம், சென்னையில் உள்ள டாக்டர் உ.வே.சா. நூலகம், மறைமலை அடிகள் நூலகம் மற்றும் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் ஆகியவை அடங்கும்.

### *9.5.1 குறிப்பிடத்தக்க நூலகங்கள்*

#### *9.5.1.1 கன்னிமாரா பொது நூலகம், சென்னை*

1896 முதல் ஒரு தேசிய வைப்பு நூலகமாக செயல்பட்டு வரும் இந்நூலகம், அனைத்து இந்திய வெளியீடுகளின் நகல்களை, நூல்கள் மற்றும் செய்தித்தாள்கள் விநியோகச் சட்டம், 1954 இன் கீழ் பெறுகிறது. 9.61 இலட்சம் நூல்கள் மற்றும் 1.49 இலட்சம் உறுப்பினர்களைக் கொண்டுள்ள இந்நூலகத்தால், 2024–25ஆம் ஆண்டில் 2.03 இலட்சம் வாசகர்கள் பயனடைந்துள்ளனர்.

*9.5.1.2 அண்ணா நூற்றாண்டு நூலகம், சென்னை*

இந்நூலகம் 2010இல் திறக்கப்பட்டது. 7.01 இலட்சம் நூல்களைக் கொண்ட இந்நூலகத்தில், பார்வை மாற்றுத்திறனாளி வாசகர்களுக்கான பிரிவு, போட்டித் தேர்வுப் பிரிவு, மின் நூல்கள், தமிழ் இலக்கிய ஆவணங்கள், ஓலைச்சுவடிகள் மற்றும் கையெழுத்துப் பிரதி சேகரிப்புப் பிரிவுகள் உள்ளன. 2024–25 ஆம் ஆண்டில், 5.17 இலட்சம் வாசகர்கள் இந்நூலகத்தால் பயனடைந்துள்ளனர்.

*9.5.1.3 கலைஞர் நூற்றாண்டு நூலகம், மதுரை*

ஜூலை 2023இல் திறக்கப்பட்ட இந்த அதிநவீன நூலகத்தில் 3.64 இலட்சம் நூல்கள், கலைக்கூடம், மின் நூலகம், குழந்தைகள் அரங்கம், பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கான ஒலிப்புத்தகப் பதிவு அறை மற்றும் அரிய நூல்கள் பிரிவு ஆகியவை உள்ளன. இந்நூலகம் மூலம் 2024–25ஆம் ஆண்டில் 16.56 இலட்சம் வாசகர்கள் பயனடைந்துள்ளனர்.

### *9.5.2 மாவட்ட, கிளை, ஊர்ப்புற மற்றும் நடமாடும் நூலகங்கள்*

- **37 மாவட்ட மைய நூலகங்கள்:** 70 இலட்சம் நூல்கள் உள்ளன; 13.65 இலட்சம்

உறுப்பினர்கள் உள்ளனர். 2024–25 ஆம் ஆண்டில் 21.84 இலட்சம் வாசகர்கள் பயனடைந்துள்ளனர்.

- **1926 கிளை நூலகங்கள்:** 6.09 கோடி நூல்கள் உள்ளன; 66.45 இலட்சம் உறுப்பினர்கள் உள்ளனர். 2024–25 ஆம் ஆண்டில் 2.50 கோடி வாசகர்கள் பயனடைந்துள்ளனர்.
- **1915 ஊர்ப்புற நூலகங்கள்:** 2.31 கோடி நூல்கள் உள்ளன; 23.25 இலட்சம் உறுப்பினர்கள் உள்ளனர். 2024–25 ஆம் ஆண்டில் 1.42 கோடி வாசகர்கள் பயனடைந்துள்ளனர்.
- **நடமாடும் நூலகங்கள்:** 14 மாவட்டங்களில் தொலைதூரப் பகுதிகளுக்காகச் செயல்படுகிறது. 35,959 உறுப்பினர்கள் உள்ளனர். 2024–25ஆம் ஆண்டில் 38,798 வாசகர்கள் பயனடைந்துள்ளனர்.
- **பகுதி நேர நூலகங்கள்:** கிராமப்புறப் பகுதிகளில் 786 நூலகங்கள் சேவையாற்றி வருகின்றன. 3.61 இலட்சம் உறுப்பினர்கள் உள்ளனர். 2024–25 ஆம் ஆண்டில் 25.02 இலட்சம் வாசகர்கள் பயனடைந்துள்ளனர்.

மேலும் நூலக சேவையை மேம்படுத்த, மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், அரசு மருத்துவமனைகள் மற்றும் பேருந்து நிலையங்கள் போன்ற மக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் 100 சிறப்பு பகுதிநேர நூலகங்கள் அமைக்கப்பட உள்ளன.

## 9.6 நூலக வரி

சொத்து வரியிலிருந்து ஒரு ரூபாய்க்கு 10 பைசாவாக வசூலிக்கப்படும் நூலக வரி, பொது நூலகங்களுக்கான முதன்மை வருவாய் ஆதாரமாக உள்ளது. 2022–23 முதல், உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரப் பகிர்வு நிதியிலிருந்து இத்துறைக்கு முன்பணமாக வழங்கப்பட்டு, சீரான செயல்பாடுகளை உறுதி செய்கிறது. 2024–25 முதல், நூலக மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஒற்றை ஒருங்கிணைப்புக் கணக்கு வங்கி அமைப்பு மூலம் நேரடியாக நிதியளிக்கப்படுகிறது.

## 9.7 வாசகர் வட்டங்கள் & நூலக விருதுகள்

சமூக ஈடுபாட்டை வளர்ப்பதற்காக, நூலகங்களில் வாசகர் வட்டங்கள் நிறுவப்பட்டுள்ளன. அவை கல்வியாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் வாசகர்களை ஒன்றிணைக்கின்றன. சிறந்த பங்களிப்புகளுக்காக நூலக ஆர்வலர் விருது (ரூ.5,000 மதிப்புள்ள

கேடயம்+சான்றிதழ்) ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. சேவைகளில் சிறந்து விளங்கும் நூலகங்கள் கேடயங்களைப் பெறுகின்றன. மேலும், சிறந்த நூலகர்களுக்கு டாக்டர் எஸ்.ஆர்.அரங்கநாதன் விருது (வெள்ளிப் பதக்கம் + ரூ.5,000) வழங்கி கௌரவிக்கப்படுகிறது.

### 9.8 நடைபெற்றுவரும் திட்டங்கள்

#### *9.8.1 தந்தை பெரியார் நூலகம் மற்றும் அறிவியல் மையம், கோயம்புத்தூர்*

ரூ.300 கோடி மதிப்பீட்டிலான திட்டத்திற்கு, 2024 ஆம் ஆண்டு நவம்பர் 6ஆம் நாள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

#### *9.8.2 மாபெரும் நூலகம் மற்றும் அறிவுசார் மையம், திருச்சிராப்பள்ளி*

உலகத்தரம் வாய்ந்த வசதியுடன் ரூ.290 கோடியில் திட்டமிடப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 21.03.2025 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. விரைவில் கட்டுமானப்பணிகள் தொடங்கும்.

### *9.8.3 நூலக உள்கட்டமைப்பு மேம்பாடு*

குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினருக்கான வசதிகளை மேம்படுத்துவதற்காக 821 பொது நூலகங்களில் ரூ.213.46 கோடி செலவில் புதிய கட்டடங்கள் கட்டுதல், நூல்கள், தளவாடங்கள் மற்றும் கணினிகள் வாங்குதல் போன்ற பணிகள் சிறப்பு உதவித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 9.9 நிதி ஒதுக்கீடு

2025-26ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் பொது நூலக இயக்ககத்திற்கு ரூ.946.04 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 10. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

## 10.1. முன்னுரை

பிறமொழியிலுள்ள அறிவார்ந்த நூல்களைத் தமிழ் மொழியில் மொழி பெயர்க்கவும், மாணவர்களின் அறிவாற்றலை வளர்க்கும் கல்விசார்ந்த புதிய நூல்களைத் தமிழில் உருவாக்கவும் தமிழ் வெளியீட்டுக் கழகம் 1961–இல் தோற்றுவிக்கப்பட்டது.

1970–இல் தமிழ் வெளியீட்டுக் கழகம், பாடநூல்களை அச்சடித்து வழங்கும் நோக்கத்தோடு தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் என்ற பெயரில் மறுசீரமைக்கப்பட்டது. நாளடைவில் இப்பணிகளுடன் இலக்கியம், அறிவியல், தொழில்நுட்பம் முதலிய பல்வகை நூல்களையும் உருவாக்கும் நிறுவனமாக வளர்ந்து 1993ஆம் ஆண்டில் 'தமிழ்நாடு பாடநூல் கழகம்' என்று பெயர் மாற்றம் கண்டது. பின்னர் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களைக் கொள்முதல் செய்து, விநியோகம் செய்யும் பணியையும் இக்கழகம் ஏற்றது. அதனால், 'தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இக்கழகத்தின் நிர்வாக

செயல்திறனை மேம்படுத்தும் பொருட்டு, 2024–ஆம் ஆண்டு ஜூலை 02–ஆம் நாள் முதல் நிறுவனங்கள் சட்டம் 2013/பிரிவு–8இன் கீழ், பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இக்கழகம் இயங்கி வருகிறது.

## 10.2 உள்கட்டமைப்பு

இக்கழகம் சென்னையில் உள்ள பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகத்தில் சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மாநிலத்தின் பல்வேறு இடங்களில் வட்டார அளவில் 22 கிடங்குகள் அமைந்துள்ளன.

## 10.3. அச்சுப்பணிகள்

### *10.3.1. பாடநூல்கள்*

பள்ளிப் பாடநூல்களை 80 GSM தாள்களில் இக்கழகம் அச்சிட்டு வழங்குகிறது. மாணவர்களின் கற்றல் அனுபவத்தை மேம்படச் செய்யும் வகையில், பாடம் தொடர்பான காணொலிகளையும் வினா வங்கியையும் இணையதளம் வாயிலாகக் காண்பதற்கு வசதியாக, விரைவுத் துலங்கல் குறியீடு (QR Code) என்ற சிறப்பு அம்சத்துடன் பாடநூல்கள் அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

### *10.3.2 பாடநூல்கள் விநியோகம்*

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு விலையில்லாப் பாடநூல்கள் வழங்கப்படுகின்றன. தனியார் பள்ளிகளுக்கு மாநிலத்தில் உள்ள 22 வட்டார அலுவலகங்கள் வழியாகப் பாடநூல்கள் விற்பனை செய்யப்படுகிறது. பொதுமக்களுக்கு இணையதளம் வழியாகவும், பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகத்தில் உள்ள 2 விற்பனை நிலையங்கள், அண்ணா நூற்றாண்டு நூலகம் மற்றும் அடையாறு கிடங்கில் உள்ள விற்பனை நிலையம் வாயிலாகவும் பாடநூல் விற்பனை செய்யப்படுகிறது. மேலும், இ–சேவை மையம் (TACTV) வழியாகவும், புத்தகத் திருவிழாக்கள் வாயிலாகவும் பாடநூல்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

2021–22ஆம் ஆண்டு முதல் 2024–25 ஆம் கல்வியாண்டு வரை 27.11 கோடி எண்ணிக்கையிலான விலையில்லாப் பாடநூல்கள் மற்றும் விற்பனைப் பாடநூல்கள் ரூ. 1979.76 கோடி மதிப்பில் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளன. 2025–26 ஆம் கல்வியாண்டிற்குரிய, 4.19 கோடி எண்ணிக்கையிலான புத்தகங்கள் அச்சிடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### *10.3.3 பிற நூல்களை அச்சிடுதல்*

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் மற்றும் பல்வேறு அரசு நலத்துறைகள் உள்ளிட்ட துறைகளுக்கும் இக்கழகம் பல்வேறு நூல்களை அச்சிட்டு வழங்கும் பணியை மேற்கொண்டு வருகின்றது. இக்கழகம் 2024–25ஆம் ஆண்டில் மேற்காணும் துறைகளுக்கு ரூ.100 கோடி மதிப்பிலான 435.56 இலட்சம் எண்ணிக்கையிலான நூல்களை அச்சிட்டு வழங்கியுள்ளது.

## 10.4. வெளியீட்டுப் பணிகள்

### *10.4.1. அரிய நூல்கள் மின்மயமாக்கம் மற்றும் மறுபதிப்பு செய்தல்*

தமிழ்நாடு அரசால் தமிழ்வழியில் உயர்கல்வி 1960களின் பிற்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டது. 1968–78 காலகட்டத்தில் வெளியிடப்பட்ட 900 தலைப்பிலான நூல்களில் இதுவரை 875 நூல்களை மின்மயமாக்கி, மறுபதிப்பு செய்து ரூ.6 கோடி மதிப்புள்ள நூல்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

### *10.4.2. போட்டித் தேர்வு நூல்கள்*

உயர்கல்வி நுழைவுத் தேர்வுக்குரிய இயற்பியல், வேதியியல், உயிரியல் ஆகிய பாட வினா வங்கிகள் 6 தொகுதிகளாக, தனியார் நிறுவங்களுடன் இணைந்து தயாரிக்கப்பட்டு ஆண்டுதோறும் வெளியிடப்படுகிறது. இந்நூல்கள் பள்ளிகளுக்கு வழங்கப்படுவதோடு விற்பனை செய்யப்பட்டும் வருகின்றன.

### *10.4.3. திசைதோறும் திராவிடம்*

இத்திட்டத்தின்கீழ் தமிழ் இலக்கியம் மற்றும் வரலாற்றைப் பரப்பும் நோக்கத்தோடு, புதினம், சிறுகதைகள், கவிதை மற்றும் வரலாற்று நூல்கள், பிற திராவிட மற்றும் பன்னாட்டு மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிடப்படுகின்றன. இதன்படி, 20 ஆங்கிலம், 7 கன்னடம், 6 மலையாளம் மற்றும் 1 தெலுங்கு பதிப்பகங்களோடு இணைந்து இதுவரை 68 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

### *10.4.4. முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம்*

இந்தத் திட்டத்தின்கீழ் கலை, அறிவியல், மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம் சார்ந்த புகழ்பெற்ற பல்துறை நூல்கள் ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டு வருகின்றன.

ஜனவரி 2023இல், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் எல்சிவியர், ரௌட்லெட்ஜ் ஆகிய பதிப்பகங்களோடு இணைந்து இக்கழகம் கூட்டு வெளியீடாகக் கொண்டுவந்துள்ள 5 மருத்துவ நூல்கள் வெளியிடப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் 2023ஆம் ஆண்டில் 45, ஜனவரி 2024இல் 62, ஜனவரி 2025இல் 32 என இதுவரை மொத்தம் 139 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

### *10.4.5 இளந்தளிர் இலக்கியத் திட்டம்*

'வீட்டிற்கோர் புத்தகசாலை' அமைக்க விரும்பிய பேரறிஞர் அண்ணாவின் பெருங்கனவினை நனவாக்கும் நோக்கத்தோடு சிறார்கள் தங்கள் வயதுக்கேற்ற புத்தகங்களை வாசிக்கத் தரும் திட்டமே 'இளந்தளிர் இலக்கியத் திட்டம்'. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 138 சிறார் நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

### *10.4.6. நாளைய தலைமுறைக்கு நாட்டுடைமை நூல்கள்*

நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்களின் வரிசையில் தொ.மு.சி.ரகுநாதன், மயிலை சீனி வேங்கடசாமி, புதுமைப்பித்தன், ராஜம் கிருஷ்ணன் உள்ளிட்ட படைப்பாளிகளின் 36 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

### *10.4.7. நூற்றாண்டு காணும் ஆளுமைகளின் தொகுப்புகள்*

'நூற்றாண்டு காணும் ஆளுமைகளின் நினைவுத்தடம்(Reader)' வெளியிடும் திட்டத்தினைத் தமிழ்நாடு அரசு 2022–2023ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. 2023ஆம் ஆண்டு பேராசிரியர் க.அன்பழகன், குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா, தி. ஜானகிராமன், கி. ராஜநாராயணன் ஆகியோரின் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள் தொகுப்புகளாக வெளியிடப்பட்டுள்ளன.

எழுத்தாளர் இமையம் அவர்கள் தொகுத்த 'முத்தமிழறிஞர் கலைஞரின் படைப்புலகம்' என்ற நூல் 2024 டிசம்பர் 27 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது. மூன்றாவது சென்னைப் பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவில் கு.அழகிரிசாமி மற்றும் கவிஞர் தமிழ் ஒளி ஆகியோரது தொகுப்புகள் வெளியிடப்பட்டன.

### *10.4.8. பெரியார் சிந்தனைகள் மொழிபெயர்ப்புத் திட்டம்*

பெரியார் சிந்தனைகள் 21 மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளன. 5 குறுநூல்கள் கொண்ட முதல் தொகுதி மலையாளம், கன்னடம், மராத்தி, தெலுங்கு,

உருது, ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிஷ், அரபு, ரஷ்யன், ஜப்பானியம் ஆகிய 11 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு இரண்டாவது சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவில் வெளியிடப்பட்டது. மேலும், 3ஆவது சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவில் அசாமி, பெங்காலி, ஒடியா, குஜராத்தி, பஞ்சாபி, போஜ்புரி, ஹிந்தி, ஜெர்மன், இத்தாலி மற்றும் கொரியன் ஆகிய 10 மொழிகளில் வெளியிடப்பட்டன.

### *10.4.9. கூட்டு வெளியீடுகள்*

இக்கழகம், தமிழ் வளர்ச்சித்துறையுடன் இணைந்து, செவ்விலக்கியத் தமிழ் நூல்கள், இந்தோ ஐரோப்பிய ஒப்பீட்டு அகராதித் திட்டம், திராவிடக் களஞ்சியம் ஆகிய திட்டங்களின் கீழ் 21 நூல்களையும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையுடன் இணைந்து சமூகநீதி மற்றும் இடஒதுக்கீடு குறித்த ஒரு நூலையும் வெளியிட்டுள்ளது.

### *10.4.10 ஆங்கிலத்தில் நாட்டுடைமை & அரிய நூல்கள் வெளியிடுதல்*

இத்திட்டத்தின்கீழ், இதுவரை வெளியிடப்பட்ட 12 நூல்களில், Veerapandiya Kattabomman, Buddhism and Tamil

மற்றும் Jainism and Tamil ஆகிய 3 நூல்கள் மூன்றாவது சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டன.

### *10.4.11. குழந்தைகளுக்கான உலக இலக்கியங்கள்*

இத்திட்டத்தின்கீழ் இதுவரை குழந்தைகளுக்கான 22 உலக இலக்கிய நூல்கள் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டுள்ளன.

### *10.4.12 பல்வேறு திட்டங்களின்கீழ் வெளியிடப்பட்ட நூல்களின் விற்பனை*

பல்வேறு திட்டங்களின்கீழ் வெளியிடப்பட்ட நூல்கள், பொது நூலகங்கள், அரசு மற்றும் உதவி பெறும் கல்லூரிகள், போட்டித்தேர்வு நடத்தும் பயிற்சி மையங்கள், அறிவுசார் மையம் உள்ளிட்ட கல்வி மையங்கள் ஆகியவற்றுக்கு சுமார் ரூ.6 கோடி மதிப்பிலும் 48ஆவது சென்னைப் புத்தகத் திருவிழாவில் (ஜனவரி 2025) ரூ. 9.40 இலட்சம் மதிப்பிலான புத்தகங்களும் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

### *10.4.13. திருவள்ளுவர் சிலை வெள்ளிவிழா நூல் வெளியீடு*

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை **(பேரறிவுச் சிலை)** நிறுவப்பட்ட வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தை முன்னிட்டு திருமதி. திருநாவுக்கரசு அவர்களால் தொகுக்கப்பட்ட "Thirukkural – A Gem for Each Day" என்னும் கையடக்க நூல் கலைஞர் உரையுடன் மறுபதிப்பு செய்து 2024 டிசம்பர் 31 அன்று வெளியிடப்பட்டது.

### 10.5. கொள்முதல் பணிகள்

மாணவர்கள் கல்வி கற்பதற்கு இன்றியமையாத கல்வி உபகரணங்களை இக்கழகம் ஆண்டுதோறும் கொள்முதல் செய்து வழங்கி வருகிறது. 2022–2023 முதல் 2024–2025ஆம் கல்வியாண்டுகளில் விலையில்லாக் கல்வி உபகரணங்கள் சுமார் ரூ.764 கோடி செலவில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

2025–26ஆம் கல்வியாண்டில் பள்ளி மாணாக்கர்களுக்கு, பள்ளி துவங்கும் நாள் முதல் கல்வி உபகரணங்கள் வழங்கும்பொருட்டுத் தற்போது ரூ.213 கோடி மதிப்பிலான கொள்முதல் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

# 11. நிதி ஒதுக்கீடு

மானியக் கோரிக்கை எண். 43, பள்ளிக் கல்வி என்ற தலைப்பில் 2025–26 ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.46,766.68 கோடியாகும்.

**2025 –26 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு**

(ரூபாய் இலட்சத்தில்)

| கணக்குத் தலைப்பு | | | மாநில செலவினங்கள் | மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **வருவாய் பகுதி** | | | | | |
| 2051 | அரசுப் பணியாளர் தேர்வாணையம் | | 5141.49 | | 5141.49 |
| 2059 | பொதுப் பணிகள் | | 20105.00 | | 20105.00 |
| 2202 | **பொதுக் கல்வி** | | | | |
| | 1 | தொடக்கக் கல்வி | 2073086.23 | 262567.51 | 2335653.74 |
| | 2 | இடைநிலைக் கல்வி | 1984305.74 | 118189.70 | 2102495.44 |
| | 4 | வயது வந்தோர் கல்வி | 309.52 | 1320.02 | 1629.54 |
| | 5 | மொழி வளர்ச்சி | 2487.35 | | 2487.35 |
| | | திருப்பி வசூலிப்பவை | 7790.70 | | 7790.70 |
| **மொத்தம் – பொதுக் கல்வி** | | | **4067979.54** | **382077.23** | **4450056.77** |
| 2204 | விளையாட்டு, இளைஞர் நலப் பணிகள் | | 33.19 | | 33.19 |
| 2205 | கலையும் பண்பாடும் | | 51899.27 | | 51899.27 |
| 2225 | ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிறப்டுத்தப்பட்டோர் நலன் | | 36409.51 | | 36409.51 |
| 2235 | சமூக பாதுகாப்பும் நலனும் | | 371.20 | | 371.20 |
| 2251 | தலைமைச் செயலகம் சமூகப் பணிகள் | | 1581.68 | | 1581.68 |
| **நிகர மொத்த வருவாய்ப் பகுதி** | | | **4183520.28** | **382077.23** | **4565598.21** |

| | | | | |
|---|---|---|---|---|
| மூலதன செலவு பகுதி | | | | |
| 4202 | மூலதன செலவு | 110970.28 | | 110970.28 |
| **கடன் பகுதி** | | | | |
| 7610 | அரசுப் பணியாளர்களுக்கான கடன்கள் | 100.00 | | 100.00 |
| | **நிகர மொத்தம்** | **4294591.26** | **382077.23** | **4676668.49** |
| | ***மானியக் கோரிக்கை எண். 43 இன் நிகர மொத்தம்*** | | | **4676668.49** |

தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்விக்கான நிதி ஒதுக்கீட்டினை ஒவ்வொரு ஆண்டும் தொடர்ச்சியாக அதிகரிப்பது, இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வியில் மாற்றங்களை உருவாக்குவது போன்ற சீர்திருத்தங்களின் மூலம் நமது கல்வி முறை வாயிலாக சமுதாயத்தில் பின்தங்கிய பிரிவினரையும் வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்கிறது. இதன் மூலம் தமிழ்நாடு தொடக்க, இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வியில் எண்ணளவில் மட்டுமன்றி, தரத்திலும் முன்னேற்றத்தையும் நிலையான நீடித்த வளர்ச்சியையும் பதிவு செய்து வருகிறது.

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களிடம் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் பள்ளிக் கல்வித் துறை சார்பில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்த அறிக்கையினை 11.04.2025 அன்று வழங்கினார்.



மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியில் பள்ளிக் கல்வித் துறை சார்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் குறித்த விரிவான ஆய்வறிக்கையை 16.04.2025 அன்று வழங்கினார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களிடம் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் மாநில திட்டக்குழு வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினால் பள்ளிகளுக்கு குழந்தைகள் குறித்த நேரத்தில் வருவது அதிகரித்துள்ளது என்றும், 90 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட குழந்தைகளிடம் நினைவாற்றல் அதிகரித்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளதையடுத்து, இச்சீரிய திட்டத்தை அறிவித்து செயல்படுத்தியமைக்காக 17.12.2024 அன்று நன்றி தெரிவித்தார்.



மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 38.40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குளிரூட்டப்பட்ட நூலகமாக புதுப்பிக்கப்பட்ட மெரினா கிளை நூலகத்தை 16.4.2025 அன்று திறந்து வைத்து 9 நபர்களுக்கு புரவலர் சான்றிதழ்களை வழங்கினார்.



தமிழ்நாடு முழுவதும் 2025–2026 ஆம் கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கை தொடங்கப்படுவதையொட்டி சென்னை, திருவல்லிக்கேணி, லேடி வில்லிங்டன் அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் மாணவர்களுக்கான சேர்க்கை கடிதத்தை 1.03.2025 அன்று வழங்கினார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்படும் பொது நூலக இயக்ககத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள 326 நூலகக் கட்டடங்கள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள 199 பள்ளி வகுப்பறைக் கட்டடங்கள் ஆகியவற்றை 11.04.2025 அன்று திறந்து வைத்தார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களிடம் பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தர மோகன், இ.ஆ.ப, அவர்கள் பள்ளிகளில் மாணவர்களின் ஆதார் பதிவை துல்லியமாக மேற்கொண்டதில் தமிழ்நாடு முதலிடம் பெற்றதற்காக ஒன்றிய அரசின் இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தால் (UIDAI) வழங்கப்பட்ட பாராட்டுச் சான்றிதழை 11.04.2025 அன்று காண்பித்து வாழ்த்து பெற்றார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை சிப்காட் வளாகத்தில் 02.02.2025 அன்று நடைபெற்ற பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் வைர விழா பெருந்திரளணி மற்றும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு நினைவு பெருந்திரளணி (Jamboree) நிறைவு விழாவில் சாரண சாரணிய மாணவர்களின் மரியாதையை ஏற்றுக் கொண்டார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் அவர்களை சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் ஒன்றிய அரசின் 60 சதவீதப் பங்கான 2,152 கோடி ரூபாய் வழங்கப்படாததால், பள்ளி மாணவர்களின் எதிர்கால நலன் கருதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அந்நிதி ஒதுக்கீடு செய்து, தொடர்ந்து திட்டங்கள் செயல்படுத்த நிதி வழங்கியமைக்காக மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் 21.03.2025 அன்று சந்தித்து நன்றி தெரிவித்தார்கள்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்கு கல்வி பயிலச் செல்லும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கான பாராட்டு விழாவில், மாணவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் மற்றும் மடிக்கணினிகளை 02.08.2024 அன்று வழங்கி வாழ்த்தினார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க ஸ்டாலின் அவர்கள் சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா 2025 நிறைவு விழாவில், மொழிபெயர்க்கப்பட்ட 30 நூல்களை 18.01.2025 அன்று வெளியிட ஒன்றிய முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. சசி தரூர் அவர்கள் பெற்றுக் கொண்டார்.




மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் நடைபெற்ற கலைத் திருவிழாவில் மாநில அளவில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு 24.01.2025 அன்று கலையரசன், கலையரசி விருது, பரிசு கோப்பை மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் கடலூர் மாவட்டம், திருப்பயரில் பள்ளிக் கல்வித் துறை சார்பில் தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழகம் நடத்திய "பெற்றோர்களைக் கொண்டாடுவோம்" விழாவில், தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழக மாநாட்டுச் சிறப்பு மலரை 22.02.2025 அன்று வெளியிட்டார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் 3 சதவிகித விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் பள்ளிக் கல்வித் துறையில் பணிபுரிய, பணி நியமன ஆணைகள் பெற்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகள் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை 06.01.2025 அன்று சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.



புதுதில்லியில் மாண்புமிகு இந்திய குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவர்ளை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் திருச்சி மாவட்டம் மணப்பாறையில் நடைபெற்ற பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் வைர விழா பெருந்திரளணி சார்பாக 22.01.2025 அன்று சந்தித்தார்.




மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் வகுப்பறையில் மாணவர்களுடன் கலந்துரையாடி கற்றல் திறனை ஆய்வு செய்தார்.



மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் வகுப்பறையில் மாணவர்களின் கற்றல் அடைவுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை ஆய்வு செய்தார்.




மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் அரசுப் பள்ளியில் ஏற்படுத்தப்பட்டுள்ள குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை ஆய்வு செய்தார்.




மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் நாமக்கல் மாவட்டம், மல்லசமுத்திரம் ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியின் 'அரிசன் காலனி' எனும் பெயரினை அழித்து, 'மல்லசமுத்திரம் கிழக்கு' எனப் பெயர் மாற்றம் செய்ததற்கான அரசாணையை 25.11.2024 அன்று தலைமை ஆசிரியையிடம் வழங்கினார்.

அச்சிட்டோர்: அரசு மைய அச்சகம், சென்னை – 600 001.